Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் (18-6-66) இதழ் 131

...வ ஆனி 4 ஸபர் 28 சனிக்கிழமை

பீடிகளில் சிறந்தது!

இறுதி வரை

இன்பமளிப்பது

முல்லா பீடிகளே

தயாரிப்பாளரும் விநியோகஸ்தர்களும்:

முல்லா பீடி கம்பனி

கே கே எஸ். ரோட் - யாழ்ப்பாணம்.

### இலங்கை வானொலி

டோக்கியோ, ஜூன் 17

இலங்கை வானொலியும் இரு மேற்கு ஜெர்மன் வானொலிக்கும் ஆசிய ஒலிபரப்பு யூனியனில் அங்கத்தினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

ஆசிய ஒலிபரப்பு யூனியனில் 37 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இலங்கை வானொலி இதில் பூரண அங்கத்துவம் வகிக்கும் என டோக்கியோவில் இதுசம்பந்தமாக நடைபெற்ற 3 நாள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# "கல்முனை தமிழரசு மகாநாட்டில் கலந்து கொள்வேன்

## எதிர்க்கட்சி பிரசாரத்தை லட்சியம் செய்யேன்"

## பிரதமர் டட்லி சேனநாயக்கா திட்டவட்டமாக அறிவிப்பு

கொழும்பு, வெள்ளி

"கல்முனையில் நடைபெறவிருக்கும் தமிழரசுக்கட்சி மகாநாட்டில் நான் நிச்சயமாகப் பங்குபற்றுவேன் என்பது உண்மை. எதிர்க்கட்சி அங்கத்தவர்களும், அவர்களது பத்திரிகைகளும் எவ்வளவு துர்ப்பிரசாரம் செய்தபோதிலும் நான் கல்முனை மகாநாட்டில் பங்குபற்றியே தீருவேன்."

பிரதமர் டட்லி சேனநாயக்கா நேற்று முன்தினம் சுகததாசா விளையாட்டரங்கில் நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சி இளைஞர் மகாநாட்டில் பேசும்பொழுது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிரதமர் கூறியதை மேடையில் கவனித்துக்கொண்டிருந்த ஐக்கிய தேசியக்கட்சி நிர்வாகசபை அங்கத்தினர்களும், நாட்டின் பல பாகங்களிலிருந்தும் மகாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகளும் கரகோஷம்செய்து வரவேற்றனர்.

பிரதமர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''எதிர்க்கட்சியினர் கல்முனை மகாநாட்டில் நான் கலந்துகொள்வதுபற்றிக் கூறிவந்த தப்பான அபிப்பிராயத்திற்கு இன்று முற்றுப்புள்ளி வைக்க விரும்புகிறேன். தேசிய ஒற்றுமையின் மூலம் தான் நாம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை உண்டுபண்ணலாம். அதற்காகத் தான் தேசிய அரசாங்கம் உழைத்துவருகிறது.

கடந்த காலங்களில் வகுப்புவாதம் தாண்டவமாடியதன் காரணமாக நாட்டில் சீர்குலைவும் குழப்பங்களும் ஏற்பட்டன. ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர் இன்றுதான் தமிழ்பேசும்மக்களின் மத்தியில் கலந்துகொள்வதற்கு நாட்டின் பிரதமர் ஒருவருக்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. ஆகவே

(6-ம் பக்கம் பார்க்க)

## 200 ஏக்கர் காணியில் மாணவர் களை பிடுங்குவர்

### கரைச்சியில் இன்று ஆரம்பம்

கிளிநொச்சி, வெள்ளி

கரைச்சிப்பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்கள் இம்மாதம் 18ந் தேதி தொடக்கம் களைபிடுங்கும் இயக்கம் கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினத்தின் தலைமையில் ஆரம்பிக்கப்படும். இந்த இயக்கம் ஒரு மாதகாலத்துக்குத் தொடர்ந்து நடைபெறும். சுமார் 200 பிள்ளைகள் தினமும் இவ்வியக்கத்தில் பங்குபற்றி 10 ஏக்கர் நெல்வயலில் களைபிடுங்குவர். இதற்கான ஒழுங்குகள் எல்லாவற்றையும் கரைச்சிக்காரியாதிகாரி கவனித்துவருகிறார்.

இவ்வியக்கத்தின் மூலம் இம்முறை சுமார் 200 ஏக்கர் நெல்வயலில் மாணவர் களைபிடுங்குவரென எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணப் பகுதியிலிருந்தும் அநேக பிள்ளைகள் இவ்வியக்கத்தில் பங்குபற்ற ஏற்பாடாகியுள்ளது.

### ராட்சஸ இந்தியர்கள்

வாஷிங்டன், ஜூன் 17

7 அடி உயரமானபுராதன இந்திய ராட்சஸர்கள் பல நாடுகளில் பயமுறுத்தி வருகிறார்களாம். இவர்களைப் பிடிப்பது சம்பந்தமாக ஆராய 39 பேர் கொண்ட கோஷ்டி ஒன்று அமெரிக்காவில் நியமிக்கப்பட்டுள்ளது.

மிகப்பெரிய வில்லுகள் கல் ஆயுதங்கள் ஆகியவற்றை இவர்கள் உபயோகிக்கிறார்களாம். இந்த ராட்சஸ இந்தியர்கள் காடுகளில் காணப்பட்டார்கள்என அறிவிக்கப்பட்டது.

பம்பாய், ஜூன் 16

பம்பாய் மின்சார ரயில் விபத்தில்பலியானவர்களின் எண்ணிக்கை 67 ஆக உயர்ந்திருக்கிறது

## வெளிநாட்டு செலாவணிக்கு ரூ. 65 லட்சம் ஒதுக்கப்பட்டது

### அரசாங்கத்தின் முன்னேற்பாட்டு நடவடிக்கை

கொழும்பு, வியாழன்

எதிர்வரும் ஜூலை மாதம் தொடக்கம் டிசம்பர்வரையான இந்த ஆண்டின் இரண்டாவது ஆறுமாத காலத்துக்கான வெளிநாட்டுச் செலாவணியின் ஒரு பகுதியாக 650 லட்சம் ரூபாவை அரசாங்கம்நேற்று முன்னேற்பாடாக ஒதுக்கியது.

குறிப்பிட்ட 6 மாத காலத்துக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதில் காலதாமதம் ஏற்படாமல் இருப்பதற்காகவே அரசாங்கம் இவ்விதம் முன்னேற்பாடாக ஒரு பகுதியை ஒதுக்கியுள்ளது என வர்த்தக அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

முன்னேற்பாடாக ஒதுக்கப்பட்ட 650 லட்சம் ரூபாவுக்கும் பால் உணவு வகைகள், டயர்கள், ரியூப்புகள், கட்டடப் பொருள்கள் பாட்டரிகள், பாடசாலை உபகரணங்கள், குழந்தைகள் பால் மாவுவகைகள், கூ மொ விக்கான துணி வகைகள் இறக்குமதி செய்யப்படும்.

நகைகளுக்கு

யப்பான் ஜூவலர்ஸ்

64, கன்னதிட்டி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 518 தந்தி: 'யப்பான்'

## "தாமதமானாலும் தமிழ் பல்கலைக் கழகம்வரும்

### தமிழரின் ஒற்றுமையும் விடுதலையுமே இதன்நோக்கம்"

### தெல்லிப்பழையில் அமைச்சர் திருச்செல்வம் விளக்கம்

குரும்பசிட்டி, வெள்ளி

''தமிழ் இனம், மொழி அழியாதவாறு காப்பாற்றிக்கொள்ளவே தமிழ்ப்பல்கலைக்கழகத்தைக் கோருகிறோம். இது ஒரு விடுதலை இயக்கமாகும்'' என்று ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி திறந்த வெளியரங்கில் தமக்கும் செனட்டர் சு. நடராசாவுக்கும் அளிக்கப்பட்ட வரவேற்பில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அமைச்சர் திருச்செல்வம் மேலும் கூறியதாவது:—

''பழைய மன்னர்களின் ஆட்சிக் காலங்களில் ஓர் இனத்தவவர மற்றொரு இனத்தவர் போர் மூலம் மூலம்தான் அழித்து இனமாற்றம் செய்துள்ளனர் என்பதை நாம் சரித்திர வரலாறுகளில் காண்கின்றோம். ஆனால் 20-ம் நூற்றாண்டில் நமது நாட்டில் சிங்கள மொழியைய தமிழ்பேசும் மக்கள்மீது பலவந்தமாகத் திணித்து தமிழரைச் சிங்கள இனமாக மாற்றும் முயற்சியினை மேற்கொண்டனர். இவ்வகையில்தான் 1956-ம் ஆண்டில் காலம்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா சிங்களம்மட்டும் நாட்டின் அரசகரும மொழியாக இருக்கவேண்டுமென மசோதா நிறைவேற்றினர். எனவே தமிழ்மொழி, கலாச்சாரம் அழிந்துபோகாது காப்பாற்றும் நோக்குடன் அரசியல் கலப்பற்ற முறையில் பல தமிழறிஞர்கள் ஒன்று சேர்ந்து தமிழ்ப்பல்கலைக் கழக இயக்கம் ஒன்றினை ஸ்தாபித்தோம். 2000 வருட காலமாகப் பேராடி தமக்கு எனத் தனியான சுதந்திர நாட்டினை நிறுவிக்கொண்ட யூதர்கள்கூட தமது பாஷை, கலாசாரம், பண்பாடு, மானம் ஆகியவற்றைக் காப்பாற்றத் தனிப்பட்ட பல்கலைக்கழகத்தினை அமைத்துக்கொண்டனர். எனவே நாமும் இனம், மொழி அழியாதவாறு நமக்கென தமிழ்ப்பல்கலைக்கழகமொன்றினை நிறுவிக்கொள்ளவேண்டும். இது ஒரு விடுதலை இயக்கமுமாகும்.

#### ரூபா 10 லட்சம் மக்கள் பணம்

அமைச்சர்திரு திருச்செல்வம் மேலும் கூறியதாவது: தமிழ்ப்பல்கலைக்கழகஇயக்

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத விவகாரத்துக்கு ஒரு மந்திரி நியமனமாவார்?

## அரசாங்க பாராளுமன்ற கட்சிக்குவரும் பிரேரணை

கொழும்பு, வியாழன்

இலங்கையில் சமய அமைச்சு ஒன்று விரைவில் நிறுவப்படலாம். இதுசம்பந்தமாக அரசாங்க பாராளுமன்றக் கட்சிக்கு வந்துள்ள பிரேரணை ஏற்று கொள்ளப்பட்டால் சமயத்துக்கும், கலாசாரத்துக்குமென தனியான ஒரு அமைச்சு நிறுவப்படும்.

காணி நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி. சில்வாவைத் தலைவராகக் கொண்ட சிறிலங்க சோஷலிஸ்ட் கட்சி சார்பில் சமய அமைச்சு ஒன்றை நிறுவவேண்டும் என்ற பிரேரணைக்கான்முன்னறிவித்தல் அரசாங்க பார்லிமெண்டரிக் குழுவிடம் சமர்ப்பிக்கப்கட்டுள்ளது.

ரத்மஎம். பி. திரு டி ஈ திலகரத்தின பிரேரணைக்கானமுன்னறிவித்தல் கொடுத்துள்ளார். கலாசார விவகாரங்களையும் சமயஅமைச்சின்கீழ் கொண்டுவர வேண்டும் என்று அந்தப்பிரேரணையில் கோரப்பட்டுள்ளது.

## "உழைப்பில்லை; உறவினர் உதவியில்லை; நோயும் தீரவில்லை; வாழ்ந்து என்ன?"

### தற்கொலை செய்தவரின் உருக்கமான கடிதம்

யாழ்ப்பாணம், சனி

"உழைப்பில்லை; உற்றார் உறவினரின் உதவியில்லை; வருமானமில்லை. இந்த நிலையில் மாறாத வருத்தத்துடன் தினமும் செத்துக்கொண்டிருக்கிறேன். ஒரேயடியாகச் சாகவேண்டுமென அதிக நேர ஆலோசனையின் பின் முடிவு செய்துகொண்டேன்."

யாழ்ப்பாணம் வேம்படி ரோட்டைச் சேர்ந்த சிவனையா இராசையா என்பவர் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்யுமுன், தமதுமனைவி பாக்கியத்திற்கு எழுதிய கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஏழு எட்டு வருடகாலமாக அடிக்கடி வலிப்பு ஏற்பட்டு அதனால் வேதனைப்பட்டுவந்த இராசையா என்பவர் நேற்றுமுன்தினம் நச்சுத்திராவகம் அருந்திதற்கொலை செய்துகொண்டார்.

யாழ்ப்பாணம் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரண விசாரணை நடத்தினார்.

சம்பவம் நடந்த தினம் நண்பகல், காலமான இராசையா, அவரதுமாமனார் வைத்திலிங்கம் ஐயம்பிள்ளை வீட்டிற்கு சென்றதாகவும். ஆஸ்பத்திரியிலிருக்கும் தமது மனைவி, பாக்கியத்தை பார்க்க விரும்புவதாக அவர் கூறியதாகவும், சிறிதுநேரத்தில் நடுக்கமும் வலிப்பும். மயக்கமும்ஏற்பட்டதாகவும் விசாரணையின்போது கூறப்பட்டது.

டாக்டர் தங்கராசசிங்கம் உடனடியாக அழைக்கப்பட்டு பரிசோதனை செய்த பின், அவர் இறந்துவிட்டதாக அறிவித்தார்.

காலஞ்சென்றவரிடம், அரசாங்கத்துக்கும், மனைவிக்கும் எழுதிய இரு கடிதங்கள் கண்டெடுக்கப்பட்டன.

அரசாங்கத்துக்கு எழுதிய கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

கடுமையான காக்காய் வலியினால் கடந்தஏழு எட்டு வருடங்களாகத் தினமும் செத்துவருகிறேன். எனக்கு வேலையில்லை. வாழ்வதற்கு வழியில்லை. எனது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் பெரும் பாரமாக இருக்கிறேன். கடைசியாக நான், தற்கொலை செய்வதென முடிவு செய்துவிட்டேன். நான் இறப்பதால் எல்லோருக்கும் நன்மை எனக்கருதுகிறேன்.

மனைவிக்கு எழுதிய கடிதம் வருமாறு:-

அன்பு நிறைந்த தெய்வம் கடந்த 8 வருடங்களாக எவ்வளவு கஷ்டங்கள் பட்டு துன்பங்களை எதிர்நோக்கி குடும்பத்தைக் கவனித்து வந்தீர் என்பதை அறிவேன் எப்பிறவியிலும் அவற்றை மறக்கமாட்டேன், உழைப்பில்லை, உற்றார் உறவினர் உதவியில்லை, வருமானம் இல்லை. நன்மையே கிடைக்காது, எந்நாளும் கஷ்டமான நிலை. எனக்கு இருக்கும் வருத்தத்தைப் பற்றி நீர் அறிவீர். அதனால் தினமும் சாகிறேன். ஒரேயடியாகச் சாகவேண்டும் என அதிக நேர ஆலோசனையின் பின் முடிவுசெய்து கொண்டேன். பிள்ளைகளை நன்றாகக் கவனித்தால் மட்டும் போதும். அதுவே ஆறுதல் அளிக்கும். மனக்கலங்க வேண்டாம். ஆண்டவன் துணை. மனம் உடைந்த உமது கணவன்.

பிரேத பரிசோதனை நடத்திய டாக்டர்சுப்பிரமணியம் நச்சுத்திராவகம் அருந்தியதால் மரணம் ஏற்பட்டது [illegible] தற்கொலை என மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

## நயினாதீவு அம்மன் உற்சவம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், சனி

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகிறது. அடுத்த மாதம் 1-ம், 2-ம் திகதிகளில் முறையே தேர்த்திருவிழாவும், தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

## மணமகனைக் காணவில்லை

உடுப்பிட்டி, வியாழன்

முதல்நாள் திருமணம் செய்தவர் மறுநாட்காலை காணாமல் போனசம்பவம் நேற்றுமுன்தினம் புத்தூரில் நடைபெற்றது. கரணவாய் வடக்கைச் சேர்ந்த ஒரு இளைஞருக்கு மதுவைக் கொடுத்துஅவர்மதுபோதையில் இருந்த சமயத்தில் புத்தூரில் ஒரு பெண்ணுக்கு மணம் முடித்துவைத்ததாகவும், மறுநாட்காலையில் பார்த்தபொழுது மணமகன் ஓடிப்போனது தெரியவந்ததாகவும் கூறப்படுகிறது. பெண்வீட்டார் பொலிசுக்குப் புகார் தெரிவித்ததைத்தொடர்ந்து பருத்தித்துறைப் பொலிசார் மணமகனைத்தேடி வருகின்றனர்.

## நன்னீர் வழங்க கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

கொழும்புத்துறை கிழக்கில் வசிக்கும் மக்களுக்கு நன்னீர் வழங்குவதற்கு குழாய் நீர் வசதி செய்ய எடுக்கப்பட்ட முயற்சிகள் பின்னர் அரசியல் காரணங்களால் நிறுத்தப்பட்டதாகவும், இதை உடனடியாகக் கவனித்து உவர்நீர் அருந்தும் துர்ப்பாக்கியம் உடைய இப்பகுதி மக்களுக்கு உதவுமாறும் மாநகரசபைக் கமிஷர்களைக்கோரும் பிரேரணை கொழும்புத்துறை சனசமூக நிலையக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஆணையாளர்கள் பஸ் நிலையம், குழாய்நீர் வசதி, நன சந்தை முதலிய விஷயங்களில் எடுக்க உத்தேசித்திருக்கும் நடவடிக்கைகள் குறித்துகூட்டத்தில் திருப்தி விக்கப்படது.

## தற்கொ[illegible] செய்ய முயற்சித்தார்

யாழ்ப்பாணம், வெள்ளி

குடும்பச்சச்சரவு காரணமாக கிணற்றில் குதித்துத் தற்கொலை செய்ய முயற்சித்தவர் கரையூர் பொலிசார் எடுத்துக்கொண்ட துரித நடவடிக்கையால் காப்பாற்றப்பட்டார்.

பண்டியன் தாள்வைச் சேர்ந்த பி. ராசு என்பவரே கிணற்றில் குதித்துத் தற்கொலை செய்ய முயற்சித்தவராவார். தற்கொலை செய்ய முயற்சித்ததாகப் பொலிசார் இவர் மீது வழக்குத் தாக்கல்செய்துள்ளனர். (ந நி.)

## மடத்தில் வயோதிபர் மரணம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

தொண்டமானாறு செல்வச்சந்நிதி வாகனசாலை மடத்தில் க. வர்கீஸ் என்னும் வயோதிபர் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. ரி. தாமோதரம்பிள்ளை வருத்தத்தினாலும், வயோதிபத்தினாலும் மரணம் சம்பவித்ததெனத் தீர்ப்பளித்தார்.

இறந்தவரின் சடலத்தை எவரும் ஏற்க முன்வராமையால் அரசாங்க செலவில் அடக்கம்செய்யுமாறு கிராம சேவகருக்கு உத்தரவிடப்பட்டது.


## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

கரேஜ்

மெக்கானிக் ரிங்கரிங் பெயின்ரிங் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மோட்டார் கராஜ் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும் 451, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 563

### வைத்தியம்


தொய்வு, கசம், நீரிழிவு கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனாம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

REGAL—JAFFNA
NOW SHOWING!
See Rare Sights of the World!!
America by Night
( Scope Color )

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி - சாவித்திரி நடித்த
நவராத்திரி

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 7-45, 7-00, 9-30
போயா தினங்களில் 4 காட்சிகள்
YESTERDAY TODAY AND TOMORROW
(வயது வந்தவர்கட்கு மாத்திரம்)

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (அம்பாறை) ஸ்ரீகிருஷ்ணா (திருக்கோணமலை)
விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) மொடேர்ன் (பதுளை)
தீவொளி (நுவரேலியா)



எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நம்பியார், அசோகன், நாகேஷ்
பண்டரிபாய், சகஸ்ரநாமம்
மற்றும் பலர் நடித்த
சத்தியாமூவிஸ்
தெய்வத்தாய்

## விளம்பரம்

### கும்பாபிஷேகம்

உடுவில் மல்லாவரதர் வேலாயுதபிள்ளையும், மனைவி மாணிக்கம் அவர்களின் ஞாபகார்த்தமாக கைதடியில் 8-9-1966 முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானத்தில் விநாயகர், சிவன், ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயங்களை கட்டி கும்பாபிஷேகம் செய்துவைத்தார்கள். இன்று நடைபெறும் 11 நாள் அபிஷேகத்திற்கு அடியார்கள் வந்து இஷ்டசித்திகளைப் பெற்று உய்யும் வண்ணம் வேண்டுகிறோம். 607

### மனேஜர் தேவை

மட்டுவில் வடக்கு ப. நோ. கூ. சங்கத்துக்கு மனேஜர் தேவை. தகுதி: G. C. E பரீட்சையில்பூரண சித்தி (கூட்டுறவுப் பயிற்சி வியாபார அநுபவம் விரும்பத்தக்கது) வயது: 22—40 க்கு இடைப்பட்டவர்கள். சமீபத்தில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்களுடனும், பிறப்பு, தகுதி அத்தாட்சிப் பத்திரங்களுடனும் 5-7-66 க்கு முன் பதிவுத்தபால் மூலம் விண்ணப்பிக்கலாம். பிணை: உரொக்கம்: ரூபா 1000/- (ஆயிரம்) ஆதனம்: ரூபா 2000/- (இரண்டாயிரம்) சம்பளம் மாசம் ரூபா 100/- (நூறு) ஆரம்பம்: (படிகளுட்பட)

முகவரி: ஆ. வல்லிபுரநாதர், கௌரவ காரியதரிசி, ப நோ. கூ, சங்கம், J 670, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. 605


## "வதைக்க வேண்டாம்"

'மாவிட்டபுரம், வெள்ளி

மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிகள் ஜீவகாருண்யத்துடன் நடத்தப்பட வேண்டும். மாடுகளை வதைக்கும் செயல்களை சவாரியின்போது கடைப்பிடிப்வர்கள் மீது நடவடிக்கை எடுக்கச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும்' என்று வலி வடக்கு காரியாதிகாரி திரு. டி. முருகேசம்பிள்ளை அளவெட்டி பிளுக்கைவெளியில் நடைபெற்ற சவாரிப்போட்டியிற் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

42 வண்டிகள் கலந்து கொண்ட இப் போட்டியில் மயிலிட்டியைச் சேர்ந்த திரு. சபாபதி முதலிடம் பெற்றார்.

## வெட்டுக்காயம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

காரைநகர் வடக்கு விக்காவில் வாசி எம். கணபதிப்பிள்ளை என்பவர் கண்டகோடரியால் வெட்டுப்பட்டு படுகாயத்துடன் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரைத் தாக்கியதாகக் கூறப்படும் பரமசாமி என்பவரும் குப்பை விருண்டியால் தாக்கிய சிறுகாயங்களுடன் ஊர்காவற்றுறை ஆரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் அறியப்படுகிறது.

## பொலிஸ் கான்ஸ்டபிள் தாக்கப்பட்டாராம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த திரு. ஆர். எம். புஞ்சிபண்டா என்பவரை அடித்ததாகக் கைலாசபிள்ளை, குணசிங்கம் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க போர்க் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதாம்

## வட வியட்னும் அறிவிப்பு

### தன் கடல், வான பகுதியை மீறியதாக சீன குற்றச்சாட்டு

ஹானேய், ஜூன் 17

வடவியட்னும் கடல் பிராந்தியத்துக்குள் ஊடுருவிய அமெரிக்க போர்க்கப்பல் ஒன்று மூழ்கடிக்கப்பட்டதாயும், மற்றிரு அமெரிக்கக் கப்பல்கள் தாக்கப்பட்டதாயும் வடவியட்னும் அறிவித்திருக்கிறது.

அதேசமயம் சீன வானப்பிராந்தியத்தில் அமெரிக்க விமானம் ஒன்று ஊடுருவியது என்றும், சீனக்கடல் பிராந்தியந்தில் அமெரிக்க போர்க்கப்பல் ஒன்று அத்துமீறி நுழைந்ததாயும் பீகிங் குற்றம்சாட்டியுள்ளது.

வியட்னும் யுத்தத்தில் இவ்வாண்டு அமெரிக்கா 2000 க்கதிகமான வீரர்களை இழந்துவிட்டதாயும். ஆனல் இதற்கு மேலும் அமெரிக்கா உயிர்ப்பலி கொடுக்கத்தயாராய் இருக்க வேண்டும் என்றும் ஜனதிபதி ஜோன்ஸன் கூறினர்;

ஆனல் அமெரிக்கா, குறைந்த சேதத்துடன், அதிக எதிர்ப்புக் காட்டிவந்ததாயும் ஜனதிபதி குறிப்பிட்டார், வியட்னமில் பெரும் பலத்தை உபயோகிக்க அமெரிக்கா தீர்மானித்திருந்தபோதிலும் அமைதிப் பேச்சுக்கு கதவுகள் எப்போதும் திறந்து வைக்கப்பட்டிருக்கும் என்றும் அவர் தொடர்ந்து கூறினர்.

வியட்னமில் அமெரிக்கா கடைப்பிடிக்கும் கொள்கைகளை ஆட்சேபித்து வியட்னம் பிக்குகள், கல்கத்தாவிலுள்ள அமெரிக்கத் தூதரகம்முன் எதிர்த்து உண்ணவிரதம் அனுஷ்டித்தனர்.

## ரஸ்க்-சென்யி சந்திக்க யோசனை

வாஷிங்டன், ஜூன் 17

அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு, ரஸ்க்கும், சீன வெளி நாட்டு மந்திரி மார்ஷல் சென்யீயும் சந்தித்துப் பேசவேண்டும் என அமெரிக்க ஜனநாயகக் கட்சித் தலைவர் செனன்டர் மான்ஸ்பீல்ட் யோசனை கூறியிருக்கிறார்.

சீன—அமெரிக்க உறவு பற்றியும், வியட்னமில் அமைதி ஏற்படுத்துவது பற்றியும் அவர்கள் பேச வேண்டும் என்கிறர் மான்ஸ்பீல்ர்.

சீன—அமெரிக்க உறவும், வியட்னமில் அமைதியும் ஒன்றுக்கொன்று பிரிக்கமுடியாத அம்சங்கள் என அவர் கூறினர்.

திரு. ரஸ்க் இது பற்றி அபிப்பிராயம் கூறுகையில் அமைதிப் பேச்சுக்காக தாம் எந்நேரத்திலும், எந்த இடத்திற்கும் செல்லத் தயார் எனத் தெரிவித்தார்.

## இந்தோனேஷிய சீனர்களை திரும்ப ஏற்கத்தயார்?

### சீன கப்பல் அனுப்பும்

ஜாகார்த்தா, ஜூன் 17

பீகிங்கிலுள்ள இந்தோனேஷிய தூதரக அதிகாரி திரு. சுதிஸாஸ்த்ராவை தாம் ஆலோசனைக்காக அழைத்திருப்பதாய் வெளிநாட்டு மந்திரி டாக்டர் ஆதம்மாலிக் கூறினர்.

கடந்தஅக்டோபர் மாதம் நடைபெற்ற புரட்சியை அடுத்து சீன-இந்தோனேஷிய உறவு சீர்கெட்டிருக்கிறது.

பீகிங்கிலுள்ள இந்தோனேஷிய ஸ்தானிகர் திரு. ஜாவோட்டோ ராஜினமாச் செய்து, சீனவில் புகலிடம் பெற்றிருக்கிறர்.

கடந்த 8 மாதங்களாக இந்தோனேஷியாவில் சீன எதிர்ப்பு இயக்கம் தீவிரமடைந்து வருகிறது.

இந்தோனேஷியாவிலுள்ள 20 லட்சம் சீனர்களில், சீன திரும்பவிரும்புபவர்களை ஏற்றிவர கப்பல்களை அனுப்புவதாக பீகிங் கூறியிருக்கிறது என டாக்டர் மாலிக் தெரிவித்தார்.

அதேசமயம் சீனவிலுள்ள இந்தோனேஷிய மாணவர்களில் 50 பேர் நாடுதிரும்ப மறுத்துவிட்டார்கள் என்றும் அவர் கூறினர். அவர்களது பாஸ்போர்ட்டுகள் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாய் அவர் மேலும் தெரிவித்தார். (பி. டி. ஐ.)

## ஜெர்மனியில் 3000 க்கதிக வெளிநாட்டு டாக்டர்கள்

ஹாம்பர்க் ஜூன் 17

மேற்கு ஜெர்மனியில் சுமார் 70 நாடுகளைச் சேர்ந்த 3,000 க்கும் அதிகமான டாக்டர்கள், 3,644 மருத்துவ மனைகளில் பணியாற்றுகிறர்கள். இவர்களில் முதலிடப் வகிப்பது, துருக்கிய டாக்டர்கள், இவர்கள் சுமார் ஆயிரம் பேர் இருக்கிறர்கள். வெளிநாடுகளிலிருந்து 17.000 நர்சுகளும்வந்து பணியாற்றுகிறர்கள்.

சமீபகாலமாக தென்கொரியா, இந்தியா, பிலிப்பைன்ஸ் உட்பட பலநாடுகளிலிருந்து ஏராளமான நர்சுகள் வந்துள்ளனர். கொரிய நர்ஸ் பெண்மணிகள் ஊசி குத்துவதை ஜெர்மனியர்கள் விரும்புகிறர்கள். கொரியா நர்ஸ்கள் ஊசி குத்துவதற்கு முன்னர், சதையை இதமாகப் பிடித்துவிட்டு, பின்னர் ஒரிருமுறை தட்டுகிறர்கள், இதன்பின் ஊசி குத்திஞல் வலியே தெரிவதில்லை என்று ஜெர்மனியர்கள் கூறுகிறர்கள். யூ பி ஐ

## 210 பேர் அனுப்பப்பட்டனர்

சென்னை, ஜூன் 17

இவ்வாண்டு இலங்கைக்கு சட்டவிரோதமாகக் குடியேறிய 210 பேர் இலங்கை அதிகாரிகளால் திருப்பி அனுப்பப்பட்டு [illegible] வரம் வந்த [illegible] விக்கப்பட்டது.

## ருமேனியாவில் சூ பேச்சு

புக்காரஸ்ட். ஜூன் 17

சீனப் பிரதம மந்திரி திரு. சூ-என்-லாய், ருமேனியத் தலைவர்களுடன் நேற்று பேச்சுக்களை ஆரம்பித்தார். ருமேனியாவுக்கு 8 நாள் உத்தியோக விஜயத்தை மேற்கொண்டிருக்கும் சீனப் பிரதமரை, ருமேனியப் பிரதமர் வரவேற்றர்.

தங்கள் பேச்சுக்களில் ரஷ்ய-சீன உறவு இடம் பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

## ஒளிக்கதிர் டெலிபோன்

ஹனேவர், ஜூன் 17

1966-ம் ஆண்டு ஹனேவர் கண்காட்சியில் 'டெலிபோன் எக்ஸ்சேஞ்ச்'' நிலையங்களுக்கு 'சாவுமணி' அடிக்கப்படலாம். மேற்கு ஜெர்மனியில் டெலிபோன் வைத்திருப்பவர், வேறு இடத்தில் டெலிபோன் வைத்துள்ள எவரிடத்திலும் நேரடியாகத் தொடர்புவைத்துக்கொள்ளும் புதுமையானமுறையை மேற்கு ஜெர்மன் நிபுணர்கள் உருவாக்கி வருகிறர்கள். தானியங்கி தொலைபேசி துறையில் மேற்கு ஜெர்மனி பெரிதும் முன்னேறியுள்ளது. எதிர்காலத்தில் 'லாசர்' ஒளிக்கதிர் மூலமாக லட்சக்கணக்கான தொலைபேசி இணைப்புகளை ஏற்படுத்த ஜெர்மன் அஞ்சல்துறை நிபுணர்கள் சோதனைசெய்துவருகிறர்கள். 10 கிலோ மீட்டர் வரைக்கும் 'லாசா' ஒளிக்கதிரை பாய்ச்சுவதில் நிபுணர்கள் வெற்றிபெற்றுள்ளனர். டெலிபோன் தொடர்பு மட்டுமன்றி வானெலி டெலிவிஷன் ஒலிபரப்புக்கும் 'லாசர்' ஒளிக்கதிர் பயன்படும் எனக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. (யூ. பி. எஸ்.)

## 'செம்மீன்' வெனிஸ் செல்லும்

வெனிஸ், ஜூன் 17

வருகிற ஆகஸ்ட் மாதம் 28-ம் திகதி முதல் செப்டம்பர் 10-ம் திகதிவரை நடைபெறவிருக்கும் சர்வதேச திரைப்பட விழாவில் பிரபல மலையாளப்படமான 'செம்மீன்' இடம்பெறவிருக்கிறது தகழிசிவசங்கரம்பிள்ளை இப்படத்தின் கதை, வசனகர்த்தாவாகும்.

## 4 விக் : 155 ரன்

லண்டன், ஜூன் 17

இங்கிலாந்துக்கும் மேற்கிந்தியக் கோஷ்டிக்குமிடையே நேற்று ஆரம்பமான 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தியர் 4 விக்கெட் நஷ்டத்திற்கு 155 ரன்கள் எடுத்தனர்.

மழை காரணமாக இடைவேளைக்கு முன்னும், பின்னும் 3 1/4 மணி நேரம் ஆட்டம் தடைப்பட்டிருந்தது.

## அணு ஆயுதங்களை தடைசெய்ய முழு முயற்சி எடுக்கவில்லை

### வல்லரசுகள் மீது கெனடி கண்டனம்

அடிஸ்பாபா, ஜூன் 16

அணுஆயுதம்பரவுவதைத் தடைசெய்ய வல்லரசுகள் முழு முயற்சி எடுக்கவில்லை என்று செனட்டர் ருெபர்ட் கெனடி இங்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

நான்கு ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயம் செய்துவரும் செனட்டர் கெனடி தமது இறுதி விஜயத்தை இங்கு மேற்கொண்டார்.

அடிஸ் அபாபாவில்அவருக்குச் சிறப்பானதொரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

அப்பொழுது செனட்டர் கெனடி பேசுகையில், அணு ஆயுதங்கள் பரவுவதைத் தடைசெய்வதில் வல்லரசு நாடுகள் சில முயற்சி எடுத்த போதிலும் இம்முயற்சி பூரணத்துவம் பெறவில்லையென்றும் இதன் விளைவாக சிறிய நாடுகள் தொடர்ந்து பயமுறுத்தல்களுக்குள்ளாகிவருகின்றனவென்றும் கூறினர்.

இஸ்லாமிய

## உயர்தலைவர் மகாநாட்டுக்கு ஜனதிபதி நாஸர் கண்டனம்

கெய்ரோ, ஜூன் 27

அராபிய பிற்போக்குச் சக்திகள் பற்றி ஐக்கிய அராபியக்குடியரசுத் தலைவர் நாஸர் தெரிவித்துள்ள கண்டனம் காரணமாக அரபு உலகில் பிளவு ஏற்படலாமெனக் கருதப்படுகிறது.

கிழக்கு எகிப்தில் நடைபெற்ற மாபெரும் கூட்டம் ஒன்றில் பேசிய நாஸர் இனியும் இவ்வித பிற்போக்குச் சக்திகளுடன் தான் ஒத்துழைக்கத் தயாராயில்லை எனக் கூறினர்.

முஸ்லிம் சகோதரத்துவ ஸ்தாபனத்தின் மூலம் இந்த நாட்டை அழிக்க முயன்ற பிற்போக்கு வாதிகளுடன், பாலஸ்தீன விஷயத்திலும் தாம் ஒத்துழைக்கப்போவதில்லை என்ருர் நாஸர்.

பாலஸ்தீன விடுதலைப் போரில் அவர்கள் ஒத்துழைப்பு நம்பிக்கையற்றது என்ருர் அவர்.

இஸ்லாமிய உயர் தலைவர்கள் மகாநாட்டையும் அவர் நிராகரித்தார்,

இஸ்லாமிய உயர் தலைவர் மகாநாட்டை விரும்புபவர்கள் ஏகாதிபத்தியத்தை ஆதரிப்பவர்கள். முஸ்லிம் சகோதரத்துவ ஸ்தாபனம் 'சென்டோ' ராணுவக்கூட்டின் ஒத்துழைப்புடன் இந்நாட்டின் தலைவர்களைக் கொலைசெய்யச் சதி செய்துள்ளது என்றும் அவர் சாடினர்.

ஐக்கிய அராபியக் குடியரசு, சிரியா, அல்ஜீரியா, ஈராக், ஏமன் ஆகிய நாடுகளை ஒன்றுபடுத்தச் சமீபத்தில் மேற்கொண்ட முயற்சியை அடுத்து ஜனதிபதி நாஸர் இப்பாணங்களைப் பொழிந்தார்.

## தாராள இறக்குமதி

புதுடில்லி, ஜூன் 17

இந்தியாவில் சில குறிப்பிட்ட பொருட்களுக்கு இறக்குமதி தாராளமாக்கப்பட்டிருக்கிறது. சில பொருட்களுக்கு இறக்குமதி லைசன்ஸ் தேவைஇல்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

## 12 பேர் பலி!

ஷில்லாங் ஜூன் 17

அஸ்ஸாம் வெள்ளத்தில் குறைந்தது 12 பேர் மாண்டிருப்பதாயும், 3 பேரைக் காணவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

## எம். எல். ஏ.க்கள் ராஜினமா

புதுடில்லி, ஜூன் 17

ஹரியானவில் 31 காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் பஞ்சாப் எல்லைக் கமிஷன் சிபார்சுகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதை ஆட்சேறத்திருக்கிறர்கள்.

ஏற்கனவே 20 பேர் தங்கள் ராஜினமாக்களைச் சமர்ப்பித்திருப்பதாய் ஒரு செய்தி கூறுகிறது.

## காமன்வெல்த் பிரதமர்கள்

லண்டன், ஜூன் 17

இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் காமன்வெல்த் பிரதம மந்திரிகளின் மகாநாடு நடைபெறும் என பிரிட்டிஷ் பிரதமர் வில்சன் கூறினர். ஆனல் இடம், திகதி பற்றி இன்னும், ஆலோசனைகள் நடைபெற்று வருவதாய் அவர் கூறினர்.

## ராஷ்டிரபதி ஆட்சி

புதுடில்லி, ஜூன் 17

பஞ்சாபில் ராஷ்டிரபதி ஆட்சியை ஏற்படுத்துவது குறித்து அடுத்த சில தினங்களில் முடிவுசெய்யப்படும் என அரசாங்க அதிகாரி ஒருவர் கூறினர்.

சட்ட சபையைக் கலைக்காமலேயே ராஷ்டிரபதி ஆட்சி அங்கு பிரகடனப்படுத்தப்படக்கூடும்.

## காங்கிரஸ் வெற்றி

ஹைதராபாத், ஜூன் 17

ஆந்திர பிரதேசத்தில் ஸ்தல அதிகாரிகள் தொகுதிக்காக நடைபெற்ற 10 தேர்தல்களில், 9 ஸ்தானங்களை காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது.

## வர்த்தக மந்திரிகள் கூட்டம் முடிவு

லண்டன், ஜூன் 17

லண்டனில் நடைபெற்ற காமன்வெல்த் வர்த்தக மந்திரிகள் மகாநாடு நேற்று முடிவடைந்தது.

## சந்திரன் எவருக்கும் சொந்தமில்லை

நியூயோர்க், ஜூன் 17

சந்திரனை யாரும் சொந்தம்பாராட்டக்கூடாதெனக் கூறும் நகல் உடன்படிக்கை ஒன்றை அமெரிக்காவும், ரஷ்யாவும் ஐ. நா.வுக்குச் சமர்ப்பித்துள்ளன.

சந்திரனை ராணுவ காரணங்களுக்குப் பயன்படுத்தக்கூடாதென்றும் இதில் கோரப்பட்டுள்ளது

சந்திரனையும் இதர கிரகங்களையும் எவரும் உரிமை பாராட்டவோ, அவற்றை ராணுவ நோக்கத்திற்குப் பயன்படுத்தவோ கூடாதென்ற சர்வதேச ஒப்பந்தம் செய்துகொள்ளப்படவேண்டும் என்றும் இரு வல்லரசுகளும் யோசனை கூறியிருக்கின்றன.

இவ்வித உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்வதில், இனித் தாமதிப்பது கூடாதென்றும், ஏனெனில் மனிதன் சந்திரனில் இறங்கும் காலம் சமீபித்துவிட்டதென்றும் அமெரிக்கப் பிரதிநிதி கோல்ட்பர்க் கூறினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

யான் என்னும் செருக்கைப் பூரணமாக ஒழிப்பதே இந்த மாட்சி வாய்ந்த வாழ்க்கையைப் பெறும் இரகசியம்.

—சுவாமி இராமதாஸர்

# ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389

யாழ்ப்பாணம் பரபவ ஆனி மீ 4 (18-6-66)


## பொலிஸ்கமிஷன் தேவை

பொதுமக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டியவர்கள் பொலிஸ்காரர்கள். நாட்டில் குற்றச் செயல்களை நடைபெருமல் தடுத்து அமைதி, ஒழுங்கு கட்டுப்பாடு ஆகியவற்றைப் பேண வேண்டிய பொறுப்பும் அவர்களிடமே உள்ளது, குற்றச் செயல்களில் ஈடுபடுபவோரைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தண்டனை பெற்றுக்கொடுப்பதன் மூலம் குற்றச்சம்பவங்கள் பரவாமல் தடுக்க வேண்டியதும் அவர்கள் கடமை இத்தனை பொறுப்பும் கடமையும் உள்ள பொலிசார் இவற்றுக்கு எதிர்மாருன செயல்களில் ஈடுபட்டால், அது வேலியே பயிரை மேய்ந்த கதையாகமுடியும்! பொலிசார் மீது பொதுமக்கள் நம்பிக்கை இழந்துவிடுவார்கள்!

நல்ல காலமாகப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் விழிப்புடன் செயலாற்றியதால் பொலிஸ் சேவையில் பொதுமக்கள் நம்பிக்கையை முற்றுக இழந்துவிட வேண்டிய நிலை ஏற்படாமல் தடுக்கப்பட்டுவிட்டது. இதற்காக பொலிஸ் அதிபர் திரு. ஜோன் அட்டிகலையைப்பாராட்ட வேண்டும்.

துப்புத்துலக்கப்பட்டு வரும் ஒரு மர்மக் கொலையின் முக்கிய சாட்சிகள் எனக் கருதப்படும் இருவர் மீது போலிக் குற்றச்சாட்டுச் சுமத்தி வழக்குத் தொடரப்பட்டதாக ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் மறறும் மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்கள் ஆகியோர் மீது வழக்குத் தொடரப்படவிருக்கிறது. போலிக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட இருவரையும் விடுதலை செய்த நீதிபதி, அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் நடத்தையை வன்மையாகக் கண்டித்திருக்கிருர். இந்தப் பொலிஸ் அதிகாரிகளின் நடத்தை கண்டுபிடிக்கப்பட்டிருப்பதும் இதில்பொலிஸ்அதிபர்எடுத்த முயற்சிகளும் பாராட்டுக்குரியது பொலிஸ் மீது பொதுமக்களின் நம்பிக்கையையும் இது அதிகரிக்கச் செய்துள்ளது.

ஆனல் நாட்டில் நடைபெறும் குற்றச் சம்பவங்கள் அனைத்தையும் பொலிஸ் அதிபர் தமது நேரடிப் பொறுப்பில் எடுத்துத் துப்புத்துலக்குவது சுலபமான காரியமல். வட பகுதியிலும் பல குற்றச் சம்பவங்கள் துப்புத்துலக்கப்படாமலுள்ளன இவை தவிர சில பொலிசார் மீது பொதுமக்கள் நாட்டின் பகுதிகளிலும் பல தடவைகளில் புகார் தெரிவித்திருக்கின்றனர். இப்புகார்கள் பற்றி விசாரணை நடைபெறுவதுண்டு அவற்றின் முடிவுகள் பொதுமக்களுக்குத் திருப்தியளிப்பதில்லை பொலிசாருக்கெதிராகப் பொதுமக்கள் பொலிஸ் நிலையத்திற்குச்சென்றுதான் புகார் தெரிவிக்கவேண்டும். பொலிஸ் நிலையத்திற்கே பொதுமக்கள் செல்ல அஞ்சுகின்றனர். இதற்குச் சில பொலிஸ் உத்தியோகத்தரின் நடவடிக்கைகளே காரணம் பொலிசாரின் நடவடிக்கைகள் பற்றி அதாவது குற்றச் செயல்களைத்தடுக்கவேண்டிவர்களே குற்றச்செயல்களில் ஈடுபட்டால்அவர்கள்மீது பொதுமக்கள் புகார் செய்வதற்கு நிரந்தர பொலிஸ் கமிஷன் ஒன்று இருக்க வேண்டும். இத்தகைய கமிஷன் இருந்தால் குற்றச் சம்பவங்களைப் பற்றிய அந்தரங்கத் தகவல்களும் கிடைக்கக்கூடியதாக இருக்கும். பொலிஸ் அதிபரே பொலிஸ் கமிஷன் நியமிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டால், அவரது வேலைப்பளுவும் குறையும்.

## தேசீய ஒற்றுமை

தேசிய ஒற்றுமையை உருவாக்குவதற்குச் சிறந்த வழி வடக்கு கிழக்கு மாகாணங்களுக்குச் சிங்கள ஆசிரியர்களை அனுப்புவதுதான் என்று மல்வத்தை மடாதிபதி ஸ்ரீ அமுனுகம விபாஸி மகாநாயக்கதேரோ குளியாப்பிட்டியில் ஒரு வைபவத்தில் பேசுகையில் கூறியிருக்கிருர்.

யாழ்ப்பாணத்துக்குசமீபத்தில் விஜயம் செய்து திரும்பிய மகாநாயக தேரோ இப்பகுதி மக்கள் தேசிய ஒருமைப்பாட்டிலும் நாட்டின் ஐக்கியத்திலும் கொண்டுள்ள ஆர்வத்தையும் நம்பிக்கையையும் அவர் அறிந்து சென்றிருக்க வேண்டும். பௌத்த மதத்தின்மீதும் சிங்கள மொழியின்மீதும் இப்பகுதி மக்கள் மதிப்பும் மரியாதையும் வைத்துள்ளனர். சிங்களமொழி மீதோ, சிங்கள மக்கள் மீதோ தமிழ்பேசும் மக்களுக்கு வெறுப்புக் கிடையாது. ஆனல் தமது மொழி உரிமையை இழந்து, சுயமரியாதையை இழந்து, இனத்தை மறந்து தேசிய ஐக்கியத்தை அவர்கள் விரும்பமாட்டார்கள். வேறுபட்ட மொழிபேசும் இனத்தவர் வாழும் ஒருநாட்டில் ஒரு மொழி, ஓர் இனம் என்ற ரீதியில் தேசிய ஐக்கியம் உருவாக முடியாது.

எனவே "நாட்டின் சகல பாடசாலைகளிலும் சிங்கள, தமிழ் ஆசிரியர்களை நியமித்து தாய் மொழியுடன் தேசிய மொழிகளில் ஒன்றை இஷ்ட பாடமாகவாவது போதிக்க ஏற்பாடு செய்வதன்மூலமே தேசிய ஒற்றுமை உருவாக முடியும்.

## சைப்பிரஸ்
### ஐ. நா. படை

நியுயோர்க், ஜூன் 17

சைப்ரஸிலுள்ள ஐ. நா. படைகளின் சேவைக்காலம் மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது.

# பிடி அரிசி மூலம் பசிதீர்க்கும் பணி

[சில தினங்களுக்கு முன் சென்னையில் ஆதீனங்களின் பேரவைநடைபெற்றது. இப் பேரவையில் காஞ்சிகாமகோடிபீடம் ஜகத் குருசங்கராச்சார்ய சுவாமிகள் நிகழ்த்திய உரை இங்கு சுருக்கமாகத்தரப் பட்டுள்ளது.]

ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு சொம்பு அல்லது சட்டி போன்ற பாத்திரம் வைத்து அதன் கழுத்தில் மஞ்சள் கயிறு சுற்றி, அதில் ஒவ்வொரு நாளும் ஒரு பிடி அரிசி போடவேண்டும். முடிந்தால் ஒரு நயாபைசா போடலாம். ரேஷன் சிரமம் அதிகமானல் அரைப்பிடி (படியல்ல) அரிசியாவது போடவேண்டும். அது நிரம்பினவுடனே பக்கத்திலுள்ள ஏதாவதொரு கோயிலில் ஸ்வாமிசந்நிதியில் ஒரு இலையைப்போட்டு அதை அர்ப்பணம்செய்யவேண்டும். எந்தக் கோயிலில் செய்யத் தோன்றுகிறதோ அதில் செய்யலாம் இன்று பேரவை ஏற்படுகிறது. இன்றுமுதலே அப்படிச் செய்யவேண்டும். அந்தக் கோயிலில் உள்ளவர்களோ மற்றவர்களோ சேர்ந்து அங்கு சிறு சபை அமைத்துக்கொண்டு ஒரு மரப்பெட்டி வைத்து அதில் துவாரமிட்டு அரிசியைச் சேர்த்துவிடலாம் அந்தப் பெட்டி நிரம்பினவுடனே அதைத் தினமும் கொஞ்சமாக மடப்பள்ளியில் பக்குவம்செய்து அம்பாளுக்கும், ஈசுவரனுக்கும் நைவேத்தியம்செய்து மாலையில் மலிவான விலைவைத்து பட்டைசாதமாக 10 பைசா விலைக்கு ஏழைஎளியவர்களுக்கு விற்கலாம் பசி பட்டினியிருக்கும் எளியவர்களுக்கு உதவலாம். தெய்வத்துக்கு நாம் அர்ப்பணம்செய்யும் மனப்பான்மை பெறவேண்டும். தெய்வம் கேட்பது மனப்பான்மைதான். ஆகவே நாம் இந்தமாதிரிச் சிறு சபைகளை வைத்துத் தெய்வத்திற்காக அர்ப்பணிப்பதோடு அன்ருடம் கஷ்டப்படும் ஆத்மாக்கள் பசி தீரவும் உதவவேண்டும்.

### கோயில் சுத்தம்

இப்போது நம் நாட்டில் 700 800 வருஷங்களாகப் பார்ஸி, கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் போன்றவர்களின் கோயில்களைக் காண்கின்ருேம். அவைகள் அசுத்தமாயிருப்பதில்லை. நம் கோயில்களோ அசுத்தமாயிருக்கின்றன. சிலர் பீடி குடிப்பதற்கும், காசு வைத்துச் சூதாடுவது போன்றவற்றுக்கும்கூடக் கோயிலை மறைவிடமாக உபயோகப்படுத்துகின்றனர். நம் சொந்தப் பங்களாவில் இதைச் செய்ய அனுமதிப்போமா? ஏன்? பங்களாவில் அக்கறையுண்டு நம் கோயில்களில் அக்கறையில்லை. நம் சமுதாயத்தின் உருவமாக விளங்கும் ஆலயம் நம்முடையதென்ற எண்ணம் நமக்கு இல்லை. ஊதியம்பெறுவோர் கோயிலில் குறைந்த ஊதியமே கிடைப்பதால் பல கோயில்களுக்கு ஒருவராகப் பணிபுரிகிருர்கள் அவர்களால் சரியாகக் கவனிக்க முடிவதில்லை. நம் கோயில்கள் நாதியற்றுக்கிடக்கின்றன. அந்தக் கோயில் நம்முடையதென்ற எண்ணம் முதலில் வேண்டும் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் பிடி அரிசி போட்டுக் கோயில்களில் தரித்திர நாராயண பூஜையைத் தொடங்கினல் நம் கோயில், நம் ஆண்டவன் என்ற உணர்வு இருந்தால் கோயில்கள் சுத்த [illegible] அவைகளாகச் சேர்ந்து இதைச் செய்தால்தான் இது

பேரவையாகும். இது உண்மையான பேரவையாக வேண்டுமானல் நீங்கள் இன்றுமுதல் செயல்பட்டால்தான் அது சாத்தியம்.

அநேக பள்ளிகள், கல்லூரிகள் இருந்தால்தான் பல்கலைக்கழகம் அமையமுடியும். அதுபோலப் பல இடங்களிலும் சிறிய சபைகள் தோன்றி இதைப் பேரவையாக ஆக்கவேண்டு.

### பசி தீர்க்கும் பணி

அந்தந்த இடத்திலிருப்போர் பசிதீரப் பணிபுரிய வேண்டும். ஈஸ்வரப் பிரசாதம் வளங்கி நல்லெண்ணம் வளர வழிகாணவேண்டும். நல்ல எண்ணம் தான் புண்ணியம். தீய எண்ணங்கள் தான் பாபங்கள். நல்லெண்ணத்தை வளர்க்க இதுதான் வழி. காலை, மாலை வேளைகளில் மௌனம், தியானம் இவைகளைச் செய்து நம் கஷ்டங்களைத் தீர்த்துக் கொள்ளவேண்டும்.

சுயராஜ்யம் வந்தாலும் நாம் சுகமாக வாழவில்லை. தொல்லைகள் தீரவில்லை. ஆண்டவனைப் பிரார்த்தித்துத் தான் இவைகள் நீங்கும். நமக்கு வேலை கிடைப்பது, நோய் போவது போன்ற குறைகளைத் தீர்க்கும் பிரார்த்தனைக்கு முன்பாக ஈஸ்வர தியானம் வேண்டுமென்பதே முதல் பிரார்த்தனையாக இருக்க வேண்டும்.

### நன்றிக் கடன்

நாம் அரசாங்கத்துக்கு நகரசபைக்கு மற்றும் நமக்குதவும் ஸ்தாபனங்களுக்கு நன்றியாகக் (வரியை) கடமையைச் செலுத்துகிருேம். நமக்கு நீர், காற்று மற்றும் வளங்களைத் தந்தருளும் இறைவனுக்கும் நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிருேம். அதுதான் தெய்வீகக் கடமை. காலை மாலை மறவாமல் செலுத்தவேண்டிய கடமை ஏழைகளையும் தெய்வசம்பந்தமாகவைத்து அவர்களைக் குளிர்ந்து நோக்கிக் காக்க வேண்டும். சமூகசேவை, அரசியல்பணி எல்லாமே ஆண்டவன் சம்பந்தம்பெற்றதாயிருந்தால் நாட்டுக்கு ஒரு கஷ்டமுமிராது. எல்லாரையும் வேண்டி, அவனையும் வேண்டி நல்ல அனுஷ்டானங்களை மேற்கொள்ள வேண்டும்.

## வஸந்த உற்சவம்

யாழ்ப்பாணம், சனி

வண்ணை வீரமாகாளி அம்மன்கோவில் வஸந்த உற்சவம் நேற்று நடைபெற்றது பகல் விசேடபூசையும் ஆராதனையும், இரவு இன்னிசைக் கச்சேரியும் இடம்பெற்றன.

(5ம் கலத்தொடர்ச்சி)

பகுதியை திருவிழா பார்க்க வருபவர்களுக்குத் தேநீர் கொடுப்பதில் செலவு செய்யலாமே? இலவசமாய்க் கொடுக்கத்தான் பிரியமில்லை என்ருல் கடைகளை வைத்து நீதியான விலைக்கு தின்பண்டங்களையும் தேநீர் முதலியவற்றையும் விற்கலாமே?

ஒரு காணிவலிலோ களியாட்டத்திலோ இப்படிக் கொள்ளைலாபம் அடித்தாலும் பரவாயில்லை என்று விட்டுவிடலாம். இறைவன் சன்னதியில் இப்படிச் செய்வது இறைவனுக்கே அடுக்காத ஒன்ருகும்.

— வழிப்போக்கன்

## நாட்டிலும் நகரிலும்

அன்றைக்கு ஒரு 'திறம்' திருவிழா. யாழ்ப்பாணத்தில் எல்லாப் பகுதிகளிலுமிருந்து கிட்டத்தட்ட பத்தாயிரம் சனங்களாவது வந்திருப்பார்கள். அத்தனை பேரும் தாகசாந்தி செய்து கொள்வதற்கு அங்கே இரண்டே இரண்டு தேநீர்க் கடைகள்தான் இருந்தன. இராத் திருவிழா ஆகையினல் தண்ணீர்ப் பந்தல்களுமில்லை. வெளியூர்களிலிருந்து வந்தவர்களுக்கு கோயில் கிணறு எங்கேயிருப்பதென்பது கூடத் தெரியாது.

இந்த நிலையில் அந்த இரு கடைகளிலும் கூட்டத்துக்கு சொல்ல வேண்டுமா? எப்படியோ முட்டியடித்துக் கொண்டு உள்ளே போய் நுழைந்துவிட்டேன் நான் 'ஓடர்' கொடுத்த 'பிளெயின் டீ' அரைமணி நேரம் கழித்து மூக்குப்பேணியில் வந்தது. குடித்துவிட்டு 'எவ்வளவு' என்று கேட்டேன். பதினைந்து சதம் என்று சொன்னர்கள்!

அந்த இடத்தில், அந்த நேரத்தில் 'பிளெயின் டீ' யாவது கிடைத்தது ஒரு பெரிய காரியம்தான். அதற்காக ஐந்துசதம் விற்கும் ஒரு பேணி தேநீர் பதினைந்து சதமானது எதற்காக? சந்தர்ப்பம் கிடைத்தபோது அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு அந்த ஒரு திருவிழாவோடேயே தனவானகிவிடலாம் என்ற எண்ணம்தானே? கோயிலுக்குப் போகிறவர்களிடம் இந்தமாதிரிக் கொள்ளையடிப்பது நல்ல கைங்கரியமாக எனக்குத் தோற்றவில்லை. ஒரு பேணி தேநீருக்கு ஐந்துசதமே கூடிவிட்டதென்று சனங்கள் நினைக்கும்போது அதைப் பதினைந்து சதத்துக்கு விற்ருல் தவித்த முயலை அடிப்பது போலல்லவா இருக்கிறது?

திருக்கோயில் ஆண்டவனின் சன்னதி. ஏழை மக்கள் பணம் செலவுபண்ணி பார்க்கவும் கேட்கவும் முடியாத கலைநிகழ்ச்சிகளைக் கோயில்களில் சுவாமியின் பெயரால் இலவசமாக வழங்குகிருர்கள். அத்தகைய திருவிழா தினங்களில் சனங்களை இவ்விதம் ஏமாற்றுவது முறையா?

எத்தனையோ கோயில்களில் அன்னதானம் செய்கிருர்கள், தண்ணீர்ப்பந்தல் வைக்கிருர்கள், இலவசமாகச் சோடாக்கூடக் கொடுக்கிருர்கள். இல்லை என்றுசொல்லவில்லை. ஆனல் இந்த நல்ல விஷயங்களுக்கும் இழுக்குத் தேடும் வகையில்மேலே கூறிய விஷயங்களும் நடைபெறுகின்றன.

வெசாக், போஸன் முதலிய பௌத்த பெருநாட்களில் வியாபாரக் கடைகளுக்கு இடமே இல்லாதபடி இலவச போசனசாலைகளும், சோடா முதலிய குளிர்பானங்களை வழங்கும் இடங்களும் ஏராளமாக அமைக்கப்பட்டு வெகு தூரத்திலிருந்து வரும் மக்களுக்கு ஒருவிதமான தட்டுப்பாடும் இல்லாதவண்ணம் ஏற்பாடு செய்கிருர்கள். அங்கே சில சமயங்களில் தேநீர், கோப்பிகூட தானம் வழங்குகிருர்கள்.

எங்கள் கோயில்களில் இவ்விதம் அநீதி நடப்பதை கோயில் நிர்வாகிகள் கண்டித்து தடை செய்ய வேண்டும். திருவிழா செய்கிறவர்களும் இதில் உதவி செய்யலாம். கோயிலைச் சுற்றி ஆயிரத்தெட்டு 'பல்பு'கள் பூட்டிய நூற்றெட்டு சிகரங்களை அமைத்து என்ன பயன்? அவற்றிக்குச் செலவாகும் பணத்தில் ஒரு

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த நிதி ஆண்டில் அதிகமானோருக்கு வேலைவாய்ப்புகள்

## பிரதமர் வாக்குறுதி

கொழும்பு, வெள்ளி

அடுத்த வரவு — செலவுத் திட்டத்தின் மூலம் நாட்டில் வேலையற்றிருக்கும் பலருக்கு வேலைவாய்ப்பளிக்கப்படும் என சுகததாசா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் வாலிப முன்னணி மகாநாட்டில் பேசுகையில் திரு. டட்லி சேனநாயக்கா தெரிவித்தார்.

வாலிபமுன்னணி மகாநாட்டில் நிறைவேற்றப்படவிருக்கும் தீர்மானங்கள் பற்றி பிரதமர் குறிப்பிட்டுப் பேசினார், திரு. டட்லி சேனநாயக்கா தமது உரையில் குறிப்பிட்டதாவது;

நாட்டின் பொருளாதார நிலைமை மிகவும் மோசமடைந்திருந்த நேரத்தில் எமது அரசாங்கம் பதவிக்கு வந்தது ஆனால் இப்பொழுது நிலைமை சீரடைந்து வருவதை மக்கள் உணர்ந்து கொள்ளமுடியும் பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டும் என்பதே எங்கள் லட்சியம். இதன் காரணமாகவே அத்தியாவசிய தேவைப் பொருள்கள் குறைந்தநிலையில் கிடைக்கத்தக்க நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுவருகிறது.

அடுத்த நிதியாண்டில் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கத்தக்கதாக திட்டமிடப்பட்டுள்ளது. ஆனாலும் அடுத்த வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் பாவனைப் பொருட்களின் விலைகள் அதிகரிக்க நேரிடலாம். அதைச் சமாளிக்கும்வகையில் வேலைவாய்ப்புக்கள் அதிகரிக்கும் பொதுமக்களை சூறையாடி கொள்ளைலாபமடிக்கும் வர்த்தகர்களைத் தண்டிக்க அரசாங்கம் ஒருபோதும் பின்னிற்கமாட்டாது. அதேநேரத்தில் தனியார்துறை முயற்சிகளை பலப்படுத்தவும் அரசாங்கம் தயங்காது

அண்மையில் கொண்டுவரப்பட்ட ஜவுளி விலைக் கட்டுப்பாடு தங்களுக்கு இன்னல் விளைவித்ததாக வர்த்தகர்கள் கூறுகிறார்கள் அது அர்த்தமற்றது. வெளிநாட்டுச்செலாவணியை விரயமாக்கி கொள்ளைலாபமடிப்பதை தடுக்கவே இவ்விதம் செய்யப்பட்டது.

### "தாமதமானாலும் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்திற்கு திருமலையில் 100 ஏக்கர் தோட்ட நிலமும் 8 ஏக்கர் காணியுமாக சுமார் 10 லட்ச ரூபா பெறுமதியான சொத்துக்கள் உண்டு. இவை தமிழ்மக்கள் அளித்த நன்கொடைகள் மூலமாக வாங்கப்பட்டவை. 1959-ல் நிதாம் கமிஷன் முன்னிலையில் திருமலையைத்தலைமைப் பீடமாகக்கொண்டு மற்றைய தமிழ் மாவட்டங்களில் ஒவ்வொரு பிரிவுகளை அமைக்கக்கூடிய விதத்தில் சகலபூரணத்துவம்கொண்ட தமிழ் பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டோம்.

#### வடக்கு கிழக்கு மலைநாடு

வடக்கில் வாழும் 6 லட்ச மக்களையும், கிழக்கிலுள்ள 3 லட்ச மக்களுடனும் மலைநாட்டில் வாழும் 9½ லட்ச மக்களுடனும் ஒன்றுசேர்த்து முழுவதும் இணைந்து சகலருக்கும் மத்தியில் தமிழ்ப்பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டும். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நாட்டின் சகல மக்களுக்கும் பங்குண்டு. இது தேசிய அடிப்படையனாது நிரந்தரமானதுமாகும் அங்கே சிங்களம், தமிழ் இரு மொழிகளும் போதனை மொழிகளாகும் ஆனால் தாம் தனிப்பட்ட இன்னொரு பல்கலைக்கழகத்தை நமது மொழி அழியாது காப்பாற்றவே கோருகின்றோம். பழைய காலங்களில் தமிழர், பர்மா, மலாயா போன்ற தேசங்களில் குடியேறி ஊழியம் தேடினர் அந்த வாய்ப்புக்கள் தற்போது இல்லை. கிழக்குப் பகுதியில் போதிய நிலம் உண்டு. தமிழ்ப்பற்றுள்ள தமிழை தாய்மொழியாகக்கொண்ட முஸ்லீம் சகோதரர்களும் வாழுகின்றனர். தண்ணீர் தட்டுப்பாடு இல்லை. ஆகவே அங்கு யாழ்ப்பாணப் பிரதேச மக்கள் போய்க் குடியேறி தமிழ்ப்பகுதி அழிந்து போகா வண்ணம் காப்பாற்றவேண்டும். தமிழ் எம். பி. க்கள் 18 பேர் ஒற்றுமையாக தமிழ்ப்பல்கலைக் கழகம் தான் வேண்டும் என்று பிரதமரிடம் மகஜர் சமர்ப்பித்துள்ளனர். வேறு ஒரு சிலர் இந்துப் பல்கலைக் கழகம் நிறுவக்கேட்கின்றனர். அரசாங்கம் கவனிக்க முடியாது என்று தட்டிக் கழித்துவிட முடியாது. தமிழ்ப்பல்கலைக்கழகம் அமைக்க இணங்கத்தான் வேண்டும் ஆனால் சிறிது தாமதமாகலாம்.

#### தமிழ்ப்பகுதிகளாக இருக்கவேண்டும்

தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

தமிழ்மக்களின் ஒற்றுமையை நமது கட்சி இன்று சாதித்துள்ளது. எமது கட்சிக்காலத்தில் பிரதேச, சமயவேறுபாடுகள் இன்றி வடக்கு, கிழக்கு, மலைநாட்டு தமிழ்மக்கள் எல்லோரும் ஐக்கியமாக ஒன்றுபட்டுள்ளனர். நமது கட்சி சில இலட்சியங்களைக் கொண்டு கொள்கை அடிப்படையில் இயங்கி வருகின்றது தமிழ் மக்களின் ஒற்றுமையைக் கருதியே தமிழ்ப்பல்கலைக் [illegible] யில் அமைக்கக்கேட்கின்றோம். தமிழ்மக்கள் எல்லோரும் நமது கட்சியின் பாதுகாப்பிலேயே இருக்கின்றனர் நாம் பரந்த மனப்பான்மை கொண்டவர்கள். பல்கலைக்கழகம் தமிழர் அனைவருக்கும் பிரயோசனம் அளிக்கத்தக்கதாக இருக்கவேண்டும். யாழ். நகரில் மட்டும் நிறுவினால் காலப்போக்கில் யாழ்ப்பாணம் மாத்திரம் தமிழ்ப் பகுதியாக இருக்கநேரிடலாம். மற்றைய கிழக்கு, மலைநாடு பகுதிகள் தமிழ்ப் பிரதேசங்களாக இல்லாது சிங்களமக்களால் கைப்பற்றக்கூடியதாய் அமைந்துவிடும்."

#### மாவட்டசபை மசோதா

செனட்டர் திரு. சு. நடராசா பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

தமிழ்மொழி மசோதாவைக் கொண்டுவந்து நிறைவேற்றிய மந்திரி திருச்செல்வம் அடுத்த வருடம் ஆனி மாதத்திற்குள்ளே மாவட்ட சபைகள் மசோதாவையும் கொண்டுவருவார். தற்போது தமிழ் மொழியை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழியாக அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. தமிழரசுக்கட்சிதான் தமிழ்ப்பாஷையை ஆட்சி மொழியாக்கக்கூடிய முறையைப் பெற்றுக் கொடுத்தது. மாவட்ட சபைகள் அமைக்கப்படுவதால் தமிழர்மேலும் தாமே தம்மை ஆட்சிசெய்யக்கூடியதாகவும் இருக்கும்.

கூட்ட ஆரம்பத்தில் அமைச்சரும் தமிழரசுத் தலைவர்களும் கூட்டுறவு ஆஸ்பத்திரி அருகிலிருந்து ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். இவ்விழாவில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம், திரு. ஆலாலசுந்தரம் ஆகியோர் உட்பட [illegible] வேறுபல [illegible] பேசினர்.

### பண்டிதமணி அருளம்பலவனார்

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

டன் நெருங்கிய தொடர்பு கொண்டு நன்மதிப்பையும் பெற்றார்,

#### பாராட்டுவிழா

1961ம் ஆண்டு ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்தினர் அருளம்பலவனாரின் பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரையைக் கௌரவித்து ரூபா ஆயிரம் பரிசளித்தார்கள். காரைநகர் மக்களும் ஏனைய தமிழறிஞர்களும் சேர்ந்து இலங்கைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்ப்பேராசிரியர் கலாநிதி க. கணபதிப்பிள்ளை தலைமையில் காரைநகர் இந்துக்கல்லூரிநடராசா ஞாபக மண்டபத்தில் 8-10-61ல் ஒரு பாராட்டுவிழாவை நடத்தினார்கள். திரு. கே. பி ஹரன் அருளம்பலவனாருக்குப் பொன்னாடை போர்த்தியதுடன் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை பொற்கிழியும் வழங்கிக் கௌரவித்தனர் அன்றைய விழாவில் அருளம்பலவனாருக்குச் 'சங்கநூற் செல்வர்' என்ற பட்டமும் வழங்கப்பட்டது.

#### சத்திர சிகிச்சை

1962-ம் ஆண்டு அருளம்பலவனார் நோய்வாய்ப்பட்டார். குடலில் ஏற்பட்ட நோய் காரணமாக யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சத்திரசிகிச்சை பெற்றார் சுகமடைந்து மீண்டும் தொடர்ந்து பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரையை அச்சிடுவதில் முனைந்தார்.

#### 2ம் பாகம் வெளியீடு

இலங்கை சாகித்திய மண்டலப் பரிசாக வழங்கிய ஆயிரம் ரூபாவும், காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினர் பொற்கிழியாக வழங்கிய ரூபா முந்நூறும், யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் வழங்கிய ரூபா இருநூறும், அருளம்பலவனாருக்குப் பதிற்றுப்பத்து 2ம் பாகத்தை அச்சிடுவதற்கு ஓரளவு உதவியது. தமிழ்க் கல்விக்குச் சிறந்துவிளங்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழகமும், யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கமும், பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரை முதற்பாகத்தை பாடப்புத்தகமாக அங்கீகரித்தமை அருளம்பலவனாரின் ஆர்வத்தை மேலும் தூண்டியது.

#### பண்டிதமணி

யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்க ஆதரவில் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரை 2ம் பாக வெளியீட்டு விழா, சேர் கந்தையா வைத்தியநாதன் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் 'பண்டிதமணி' என்னும் பட்டமளிக்கப்பட்டது

#### தலயாத்திரை

பண்டிதமணி அருளம்பலவனார் திருவாசக ஆராய்ச்சி உரையினை எழுத முற்பட்டார். அதன்பயனாகத் திருவாசகத்தில் வரும் தலங்களை நேரில் தரிசிக்கவும் படங்களைச் சேர்க்கவும் விரும்பித் தமது பாரியாருடனும் இரு புத்திரர்களுடனும் 1964ம் ஆண்டு மார்கழியில் இந்தியாவிற்குப் புறப்பட்டுப் பல தலங்களையும் தரிசித்தார். எதிர்பாராத வகையில் கோரப்புயற்காற்றினால் பாம்பன்பாலம் தகர்க்கப்பட்டுவிட்டது. அதனால் பண்டிதமணியும் குடும்பத்தினரும் நீண்ட நாட்களுக்குத் தமிழகத்தில் தங்க வேண்டியதாயிற்று. காஞ்சிபுர ஞானப்பிரகாச சுவாமிகள் ஆதீனமகாசந்நிதானம் புலவர் சு. கு. அருணாசலம், அண்ணாமலைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் வித்துவான் அருணாசலம்பிள்ளை, திருப்பனந்தாள் கல்லூரி அதிபர் வெங்கடராமையர் ஆகிய பேரறிஞர்களோடு தொடர்புகொண்டார். காஞ்சிபுரம் ஞானப்பிரகாசசுவாமிகள், பண்டிதமணியின் திருவாசக ஆராய்ச்சியின் ஆழ்ந்த புலமையைக் கண்டு அவரை 'மாணிக்கவாசகர்' என்றே அழைத்துப் பாராட்டினார்கள். 1965ம் ஆண்டு தை 20ம் நாள் பண்டிதமணியும் குடும்பத்தினரும் விமான மூலம் தாயகம் திரும்பினர்.

#### திருவாசக ஆராய்ச்சி

திருவாசக ஆராய்ச்சியில் ஈடுபாடுகொண்ட பண்டிதமணியவர்கள் அல்லும் பகலும் உரையெழுதுவதில் முனைந்தார். அதனால் அவரது உடல்நலம் குன்றியது. ஆயினும் உரையைத் திருச்சதகம்வரை பூர்த்திசெய்த பண்டிதமணியவர்கள் அதை அச்சிடுவித்தார். ஆஸ்பத்திரியில் தம்மைப் பார்க்கச் செல்லும் அறிஞர்களிடமும் திருவாசக ஆராய்ச்சியுரை பற்றிய சந்தேகங்களை வினவிக் கொண்டிருப்பார். பண்டிதமணியின் உடல்நிலை கவலைக்கிடமானது.

#### மறைவு

1966ம் ஆண்டு வைகாசி திங்கள் 7ம் நாள் (20-5-66) வெள்ளிக்கிழமை அதிகாலையில் பண்டிதமணி அருளம்பலவனார் காலமானார்,

— சிவானந்தன்



## ஆசிரியருக்கு கடிதங்கள்

### இப்படியும் ஒரு சட்டமா?

தருமபுரம் அகதிகள் குடியேற்றத்திட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் சனத்தொகை கூடிய இரண்டாவது கிராமமாகும். 3000க்கு மேற்பட்ட மக்கள் இங்கு வசிக்கிறார்கள்.

"பாராளுமன்ற உறுப்பினர் விரும்பினால் தொகுதிக்குரிய ஏழு நிலையங்களுள் ஒருநிலையத்தைத் தருமபுரத்துக்குக் கொடுக்கலாம்என 15-4-66 அன்று கொழும்பு குடிசைக் கைத்தொழில் இலாகாவும் 2-5-66ல் யாழ்ப்பாணம் குடிசைக் கைத்தொழில் இலாகாவும் தெரிவித்திருக்கின்றன.

3-4-66 அன்று நானும் தருமபுரம் மாதர் முன்னேற்றச்சங்கத்தலைவியும், காரியதரிசியும், கிளிநொச்சி எம். பி. யைப் பேட்டிகண்டு இதுசம்பந்தமாகக் கேட்டுக்கொண்டபோது தந்திமூலம் அறிவித்து ஆவனசெய்வதாக வாக்குறுதி அளித்துள்ளார்.

11-6-66 அன்று இது பற்றி மறுபடியும் நேரிற் சென்று விசாரித்தபோது இந்தியர்கள் பெரும்பாலாக இருப்பதால் குறைந்த தொகையுள்ள இலங்கையர்களுக்காக ஒரு நெசவு நிலையத்தைத் திறந்து தரமுடியாதிருக்கிறதெனத் தெரிவிக்கப்பட்டதாகக் கூறினார்.

இப்படியும் பதிலளிக்கக் கூடியமுறையில் குடிசைத் தொழில் சட்டத்தில் ஏதும் இருக்கிறதா?

ச. கந்தசாமி

காந்திநிலையம்,

தருமபுரம்.

### குடிதண்ணீர்

யாழ்ப்பாணப் பகுதிக்கு, குழாய் மூலம் நல்ல குடிதண்ணீர் விநியோகம் செய்திருப்பது மிகத் தரும சிந்தையான காரியம். இந் நற்காரியத்திற்காக யாழ்ப்பாண மக்கள் மிக நன்றி செலுத்த வேண்டியவர்களாவார்கள்.

ஆனால் பிரதிதினமும் நண்பகல் வேளைகளில் நீர் விநியோகத்தை தடைபண்ணிவிடுகின்றனர். இதன் காரணமாக, இன்று யாழ்ப்பாண வெய்யிலின் கொடுமையால் ஏற்படும் தாகத்தைத் தீர்த்துக்கொள்ள பொதுமக்கள் அல்லல் படுகின்றனர். ஆகவே வேறொரு நேரத்தில் விநியோகத்தை நிறுத்தி நண்பகல் வேளைகளில் விநியோகமிருந்தால் மக்களைப் பாதிக்காது என எண்ணுகின்றேன்.

ப. நகுலராஜா

யாழ்ப்பாணம்.

ஜனசங்கம்

### 2275 இடங்களுக்கு போட்டியிடும்

புதுடில்லி. ஜூன் 16

வருகிற பொதுத்தேர்தலில் ஜனசங்கம் 2000 சட்டசபை ஸ்தானங்களுக்கும் 275 பார்லிமெண்ட் ஸ்தானங்களுக்கும் போட்டியிடும் என கட்சியின் பொதுக்காரியதரிசி கூறினார்.

கம்யூனிஸ்டுகள். வகுப்புவாதிகள் தவிர இதரகட்சிகளுடன் தொகுதி உடன்பாடு செய்துகொள்ள தம் கட்சி தயாராய் இருப்பதாகவும் அவர் கூறினார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனும் --- ---உள்ளமும்

— எஸ். கே. ரி. —

உணர்ச்சி எண்ணங்கள் மக்கள் மனதில் ஏற்படுவது இயற்கையே. இதனை நாம் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. உணர்ச்சி சாதாரணமாக எல்லோரிடத்தும் இருக்கக் காண்கின்றோம். சிலர் எதற்கெடுத்தாலும் உணர்ச்சி வசப்பட்ட கருத்துக்களையே எடுத்துக் கூறுவர். ஆனல் சிலர் ஆறுதலாகவும் அமைதியாகவும் மனத்தளர்ச்சியின்றி தங்கள் கருத்துக்களை உணர்ச்சி வசப்படாது தெளிவாக எடுத்துக் கூறுவர். இவ்விரு வகைப்பட்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட மக்களை நாம் எங்கள் சமூகத்தில் இருக்கக் காண்கின்றோம்.

உணர்ச்சிவசப்பட்டவர்கள் கருத்தைத் தெரிவிக்கும்பொழுது எதற்கெடுததாலும் சடுதியாக-யோசனையின்றி-ஒரு முடிவிற்கு வருவது முதல் காரணமாகும். இதையடுத்து மறுதரப்பினர்கள் கருத்துக்களை ஆராய்ந்து செய்வதே அவர்கள் வெற்றிக்குக் காரணமாயிருக்கின்றது.

இந்த உணர்ச்சி எண்ணங்களை நாம் கட்டுப்படுத்துவோமானுல் நாம் எங்கள் வாழ்க்கையில் எத்தனையோ விதமான சாதனைகளை இயற்ற முடியும். பொதுவாகவே நாம் எந்தவிதமான காரியத்தைச் செய்யினும் உணர்ச்சிவசப்பட்டு விடுகின்றோம். நாம் இதனை நாளடைவில் குறைத்துக் கொண்டுவரின் ஈற்றில் எமது நோக்கில் வெற்றி காண்பது திண்ணம். ஒருவர் நீண்ட நாட்களுக்கு உயிர் வாழ விரும்பின் அவன் கட்டாயமாக தனது உணர்ச்சி வசப்பட்ட கருத்துக்களை கண்டிப்பாக நிறுத்திக் கொள்ள வேண்டுமென்று உளநூல் நிபுணர்கள் கருத்துக் கொண்டுள்ளனர்.

உணர்ச்சிவசப்பட்ட கருத்துக்களை நாம் தெரிவிப்பனுல் சிலசமயங்களில் நாம் பிறரின் அன்பையும் ஆதரவையும் இழக்க நேரிடுகின்றது. உதாரணமாக எமக்கு ஒரு திடீர் அதிர்ச்சி ஏற்பட்டுவிட்டால் நாம் அதனை எவ்வாறு வரவேற்போம் என்று நாம் திட்டவட்டமாகக் கூறிக் கொள்ள முடியாவிட்டாலும், அவ்வதிர்ச்சியினுல்எங்களிடத்தில் ஒருசில மாற்றங்களைக் காண முடியும் என்று திடமாகக் கூறலாம். சிலர் அதிர்ச்சியுடனே அன்றேல் உணர்ச்சிவசமாகவோ பேசினுல் நாம் அதனை அவர்கள் பேச்சுத் தொனியிலிருந்து அறிந்து கொள்ளலாம். அத்துடன் உணர்ச்சி வசப்பட்டு ஒருவர் பேசும் பொழுது மற்றவர் எதைப் பற்றி உரையாடுகின்றுர் என்பதை அவர் தனது மனதில் திடப்படுத்திக் கொள்ள முடியாது. ஏனெனில் அவரது உணர்ச்சி அவரது சிந்தனைகளுக்குத் தடைபோடுகிறது. எனவே தன் உணர்ச்சித் தடைபாடு இன்றியமையாதது.

'மனிதனும் உள்ளமும்' ஒரு மனேதத்துவ அம்சம். இதை எழுதும் 'எஸ். கே. ரி.' அவர்கள் சிலகாலம் தமிழில் வெளிவந்த ஒரு உளதத்துவ சஞ்சிகைக்குப் பெரும் பங்கெடுத்து உழைத்தவர். 'கதம்ப மாலை'யில் தொடர்ந்து அவர் எழுதுவார்.

பொதுவாக உணர்ச்சி வசப்படாத மனிதர்கள் இல்லை என்று கூற முடியாது. ஏன்எனில் மனிதனுடன் உணர்ச்சியும் சேர்ந்தே பிறந்துவிடுகிறது. இதனுல் மனிதனிடம் உணர்ச்சிசுபாவம் இருக்கத்தான் செய்கின்றது. சிலரிடம் உணர்ச்சி வசப்படுதல் குறைவாகவும் பலரிடம் அதிகமாகவும் இருக்கக் காண்கின்றோம். இதனை நாம் எமது துணிவினுல் முயற்சியினுல் நாளடைவில் முழுமையாகத் தவிர்க்க முடியாவிட்டாலும் ஓர் அளவிற்காயினும் குறைத்துக் கொள்ளலாம் என்பதை நாம் அனுபவத்தினுல் அறியக் கிடக்கின்றது.

## பொறுக்கிய முத்து

சந்தேகமென்பது தானே பின்னிக்கொள்ளும் சிலந்தி வலை. தான் பின்னிய வலைக்குள் தன்னையே சிக்க வைத்துத் திணறுவதற்குச் செய்துவிடுகிறது.

—இ. நாகராஜன்.

## எஸ். பொ. பேசுகிருர்

"......இலக்கியத்திற்கு உருவம் பிரதானமானதா? உள்ளடக்கம் முக்கியமானதா?" என்று கட்சி பிரிந்து தாய்சசிற்றம்பலம் விளையாடுதல் சவலைத்தனமானது. பிணத்தின் அழகைக் காமுறுவர் யாரோ? அன்றேல், உயிரின் எழிலைத் தரிசித்தவர் எவரோ? வாழும் அழகு! உயிருக்கு உருவம்தேவை. உருவத்திற்கு உயிர் தேவை. குரங்கின் உயிரை மனிதக் கொட்டிலே பிணைத்துக் குறளிவித்தை காட்ட முடியாது. உயிருக்குசீவன் என்ற ஏக அர்த்தம் பாய்ச்சவுந் தேவையில்லை. சீவனின்றியும் உயிரூட்டுதல். கலைப்படைப்பு இதற்குத் திருட்டாந்தம், தேர்ந்த கலைஞனின் கைவண்ணம் பட்டு உயிர் வாரும் சிலை. நம்முடைய எழுத்தாளர் பலர், இலக்கண நுனிப்புல் அறிவோ, கட்சிப்பற்ருே குறுக்கிட இலக்கியக் கலையின் மூலஸ்தான விக்கிரகத்தை தரிசிக்கத் தவறிவிட்டனர். பழகு தமிழில் எழும் 'மக்கள் இலக்கியமே' இலக்கியம் என்று ஒரு சாராரும், பழகு தமிழ் தவிர்த்துப் பனுவல்களிற் பயிலப்படும் 'மரபு மருவிய இலக்கியமே இலக்கியம்' என்று பிறிதொரு சாராரும் யானையின் உருவம் பார்த்த அந்தகர்களாக இடர்ப்படுகின்ருர்கள். ஓர் இலக்கிய மாளிகையைக் கட்டி எழுப்புவதற்கு எழுத்தாளனுக்குக் கற்கள், சாந்து, வர்ணம், வேலையாள் சகலமுமாகச் சொற்களே பயன்படுகின்றன. எதை ஏதுவாய் உபயோகிப்பின் மாளிகை உயிர் அழகு பெறும் என்பதைத் தேர்ந்த எழுத்தாளனே அறிவான். சொற்களைத் தொடுக்கும் முறை நடை. இந்த நடையைக் கலைப்படைப்பாக இசைக்கும் முறை உத்தி. கருப்பொருளும், தொனிப்பொருளும் இரண்டறக் கலந்து கலவி நெறி பயில, நடையும் உத்தியும் உதவுகின்றன......"

(எஸ். பொன்னுத்துரை அவர்களின் 'வீ' என்ற சிறுகதை நூலின் முன்னுரையிலிருந்து)

# கதம்ப மாலை

## குழந்தைக் கன்று!

-சிதம்பரபத்தினி-

மலர்கள் எடுத்துப் - பல
இதழ்கள் தொடுத்துப்
-பொன்
அலர்கள் பொலியும்
பட்டுடல்!
மதியைப் பிடித்து - அதன்
மறுக்கள் துடைத்துக்
-கவின்
மலரப் பதித்த நன்முகம்!

முகிலைப் பிடித்துப் - பல
சுருள்கள் சுருட்டி
-அதை
அலைய விடுத்தகருங்குழல்;
கலசம் எடுத்துச்- சுவைப்
பாலும் நிரப்பித்- தரு
வண்டு தவழவரும் விழி!

தணலை எடுத்து - வெம்
அனலை ஒழித்துப் - புதுப்
புனலை நிகர்த்த
செவ்விதழ்!
வெயிலைப் பிடித்து- அதன்
வெம்மை தணித்து
-முல்லை
வெட்க அரும்புவிடும்
புன்னகை!

பிறையை அழைத்துச்
-சிறு
குறைகள் துடைக்க
-அதன்
இடத்தைப் பிடித்த
ஒரு நுதல்!
வானவில்லைப் பிடித்துப்
-பல
வண்ணம் ஒழித்து-ஒளிர்
வண்ணம் கரிய இரு
புருவமே;
யாழை இசைத்து - நறுந்
தேனுங் குழைத்து-
சுவைப்
பாலுங் கலந்த இன்
மொழி!
ரோஜாப் பறித்து - வெகு
லேசாய் இழைத்துக்-கன
ஜோஜராய் அசைய
விட்ட கரம்!

பவழம் பரப்பி- இளம்
உளமும் நிரப்பி - நகை
தவழ வலம் வரும்
சிற்றடி!
இதயம் புகுந்து - மிகும்
உணர்வில் கலந்து - என்
எழிலில் புது மெருகு
தந்தது.

பைய அடியெ - டுத்து
செய்ய உடல - சைத்து
மெய்யில் தவழு மிளந்
தென்றல்;
வையம் முழுவ - தற்கும்
வாழ்வு அளிக்க - வந்த
வண்ணச் சிறு குழந்தைக்
கன்று!

அடுத்த


## கதம்ப மலரில்...

- தமிழிலக்கியமும் எதிர்காலமும் (ஒரு நோக்கு)
- இரசிக நோக்கு (ஒரு புதிய அம்சம்)
- வள்ளுவர் கொண்டை வைத்திருந்தாரா? ([illegible])

இன்னும் [illegible] பல அம்சங்கள்.

— ஈழம்தந்த உரையாசிரியர் —

# பண்டிதமணி அருளம்பலவனுர்



### பிறப்பு

யாழ்ப்பாணத்துக்கு அணித்தாயுள்ளதும், கடலாற் சூழப்பட்டதுபாக்கியகாரைநகர் என்னும் கவின்பெறு பதியில்சுவாமிநாதன் என்பவருக்கும் அவரது பாரியார் சிதம்பரம்அம்மையாருக்கும் புத்திரனுக பண்டிதமணி அருளம்பலவனுர் 1910-ம் ஆண்டு சித்திரைத்திங்கள் 11-ம்நாள் பிறந்தார்.

### இளமை

இளமையில் மிகவும் சுறுசுறுப்பாகக்காணப்பட்டார். இறைவன் பொருள்சேர் புகழைப் பெற்ருேர் தேவார திருவாசகங்கள்மூலம்பாடிப் பரவும்போது குழந்தையாகிய அருளம்பலவனுர் அருகில்இருந்து அன்போடுகேட்பது வழக்கமாகும். இதன் பயனுகக் குழந்தையுள்ளத்தில் சிவபக்தி நாளும்வளர்ந்தோங்கியது.

### கல்வி

அமெரிக்க மிஷன் பாடசாலையில் ஆரம்பக்கல்வியைப் பெற்ருர். அருளம்பலவனுரின் பதினெராம் வயதில் அவரது அருமைத் தந்தையார் காலமானுர். சைவ சமயச்சூழலில் கல்வி கற்பிக்க எண்ணிய தாயார், அருளம்பலவனுரைச் சுப்பிரமணிய வித்தியாசாலையில் சேர்த்தார். அருளம்பலவனுருக்கு உறுதுணையாக இருந்த தாயார் சிதம்பரம் அம்மையாரும் கணவனைப் பின்பற்றிக் காலமானுர்.

அருளம்பலவனுர் ஸ்ரீமத் சி. சுப்பிரமணியதேசிகர்பால் முறையாகத் தமிழ்கற்ருர். தமது பரந்த புலமைக்கும் ஆழ்ந்த அறிவிற்கும் தேசிகர் அவர்களேகாரணமாவர் என்று பிற்காலத்தில் பண்டிதமணி அவர்கள் பலமுறை சொல்லியதோடு, அன்னுரை அன்றுபோல என்றும் போற்றி வணங்குமியல்புடையவராகவும் விளங்கினுர்.

### ஆசிரியப் பயிற்சி

அருளம்பலவனுர் தமது பதினெட்டாம் வயதில் கோப்பாய் அரசினர்ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்து இரண்டாண்டுகள் பயிற்சிபெற்ருர், திரு. அருளம்பலவனுர் 1929-ம்ஆண்டில் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடத்தும் பிரவேச பண்டிதர் பரீட்சையிலும், அடுத்தஆண்டில் பாலபண்டித பரீட்சையிலும்சித்தியடைந்தார்.

### ஆசிரிய சேவை

பயிற்சிபெற்று வெளியேறிய அருளம்பலவனுர்முதன்முதலாகக் காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் ஏழு ஆண்டுகள் ஆசிரியராகக் கடமையாற்றினுர். ஒவியக்கலையில் சிறந்து விளங்கியஅம்பலவாணனுர்1931 ல் அதற்குரிய பரீட்சையிலும் சித்தியடைந்தார்.

### இல்லறம்

காரை நகரில் நீலிப்பந்தனையைச் சேர்ந்த த.க. நல்லதம்பி தம்பதிகளின் இரண்டாவது புத்திரியான ஆசிரியை விஜயசவுந்தர அம்மாவை 1953-ம் ஆண்டில் அருளம்பலவனுர் வாழ்க்கைத்துணைவியாக ஏற்றுஇல்லறத்தை இனிது நடத்தினுர். 1936-ம் ஆண்டில் மதுரைத்தமிழ்ச்சங்கம்நடத்திய பண்டிதர் பரீட்சையில் திறமையாகச் சித்தியடைந்து ஈழத்தின் புகழை நிலைநாட்டினுர்.

### ஆராய்ச்சி

மறைமலை அடிகளாரின் அறிவாற்றலை நன்குணர்ந்த அருளம்பலவனுர் அவரது முல்லைப்பாட்டாராய்ச்சியுரை, பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை என்பன வற்றை முன்மாதிரியாகவும் பெரும் பொருளாகவும் கொண்டு பழந்தமிழ்ச் சங்க நூல்களை ஆராயத் தொடங்கினுர். அதன்பயனுக திருமுருகாற்றுப்படை யாராய்ச்சியுரை எழுதி வெளியிட்டார். அண்ணுமலைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்ப்பேராசிரியர்களான பண்டித நமு வேங்கடசாமி நாட்டார் திரு. சோமசுந்தர பாரதியார் திரு. ஜம்புலிங்கம் பிள்ளை ஆகியோர் அருளம்பலவனுருக்கு நன்கு அறிமுகமானவர்கள். 1937-ம் ஆண்டில் பண்டிதமணியின் பெரும்பாணுற்றுப் படை ஆராய்ச்சியுரையும் வெளிவந்தது, நுரைசோலையில் உள்ள அரசாங்க பாடசாலையில் தலைமையாசிரியராகப் பணியேற்ற அருளம்பலவனுர் நான்கு ஆண்டுகள் சேவை செய்தபின் கொட்டாஞ்சேனை அரசாங்க பாடசாலைக்கு மாற்றப்பட்டார். பின்னர் காலியில் கடமையாற்றும்போதே மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அச்சிடுவித்த பதிற்றுப்பத்துக்கு ஆராய்ச்சியுரை எழுத முற்பட்டார். இவ்வுரையை எழுதுங்கால் ஊக்கமளித்தவர்கள் ஸ்ரீமத் சி. சுப்பிரமணியதேசிகரும், பண்டிதமணி சி கணபதிப்பிள்ளையுமாவர். அச்சிடுமுன் செவ்வனே பார்வையிட்டு உதவியவர் அருளம்பலவனுரின் நெருங்கிய நண்பராகிய தும்பளை வித்துவான் க கிருஷ்ண பிள்ளையாவர், ஆசிரியத் தொழிலில் ஈடுபட்ட நேரம் தவிர எஞ்சிய காலத்தில் ஆராய்ச்சியுரை எழுதுவதில் ஈடுபட்டும், பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரையைப்பூர்த்தி செய்யப் பண்டிதமணிக்கு பதினுன்கு ஆண்டுகள் கழிந்தன. 1959-ல் அருளம்பலவனுரும் பாரியாரும் யாழ்ப்பாணத்திற்கு மாற்றம்பெற்றனர். ஆராய்ச்சியுரையில் 2-ம், 3-ம், 4-ம், 5-ம்பத்துக்களைத் தொகுத்துமுதற்பாகமாக அருளம்பலவனுர் 1960-ம் ஆண்டு பதிப்பித்து வெளியிட்டார்.

### பேரறிஞர்களின் தொடர்பு

1960-ல் தமிழ்நாட்டுப் பேரறிஞர்களைச் சந்தித்து உரையாடவும், தலங்களைத் தரிசிக்கவும், விரும்பிய அருளம்பலவனுர் தமது நான்காவது மகனுடன் தென்னிந்திய யாத்திரையைத் தொடங்கினுர். அண்ணுமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர், பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர் தமிழ் விரிவுரையாளர் வித்துவான் மு அருணுசல பிள்ளை, மகாவித்துவான் ச. தண்டபாணிதேசிகர், வித்துவான் க. வெள்ளைவாரணனுர், சென்னைப் பச்சையப்பன்கல்லூரித் தமிழ்த் துறைத்தலைவர் டாக்டர் மு. வரதராசனுர், சென்னைப் பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியர், டாக்டர் மா. இராசமாணிக்கனுர், பச்சையப்பன் கல்லூரியரித் துணைப்பேராசிரியர் அ ச ஞானசம்பந்தன், தமிழ்ப் பேராசிரியர் சொல்லின் செல்வர் ரா பி சேதுப்பிள்ளை ஆகியோரு

5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனிக் கிராமசபை வேண்டும்

### கி. மு. சங்கம் கோரிக்கை

ஊர்காவற்றுறை, வெள்ளி

சரவணைக் கிராம சபை என ஒன்றைத் தோற்றுவித்ததன்மூலம் சரவணை வட்டாரங்களின் நலத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென அரசினரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றை சரவணை கிராம முன்னேற்றச்சங்கம் நிறைவேற்றியுள்ளது.

சரவணை நாகேசுவரி வித்தியாசாலையின் தரத்தை உயர்த்தவேண்டுமெனதீவுப் பகுதி எம்.பி யையும், கல்வி மந்திரியையும் கேட்டுக் கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

பின்வருபவர்கள் சங்கத்தின் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர் தலைவர்: திரு. இ. நகுலேசு (கி. ச. அங்கத்தவர்) உபதலைவர்: திரு. வே. இராசையா. கௌரவ காரியதரிசி: திரு. ப கந்தசாமி. உப காரியதரிசி: திரு. சி. நாகேசு. தனதிகாரி: திரு. கு. பத்மநாதன்.

ஒன்பது பேர்கொண்ட நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

## "புராணப்படிப்பு குறைகிறது!'

சுழிபுரம், வெளளி

"இன்று எமது ஆலயங்களில் புராணப் படிப்புகள் படிப்பது குறைந்து வருகின்றன. சில ஆலயங்களில் புராணங்கள் படிக்கிறார்கள். ஆனால் அங்கு புராணம் வாசிப்பவர் பயன்சொல்லுபவர் ஆகிய இருவரைத் தவிர வேறு எவரும் இருக்க மாட்டார்கள். இந்த நிலை மாறவேண்டும். இப்படியான நிலையில் தொடர்ந்து பலநாட்கள் பெரியபுராணம் படிக்கப்பட்டு அதன்பூர்த்தி விழாவையும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுவதைப் பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது' என சித்தங்கேணி மகாகணபதிப்பிள்ளையார் கோவில் கந்தபுராணப்படிப்பு பூர்த்தி விழாவில் திரு. சி. எஸ். எஸ். மணிஐயர்பேசுகையில் குறிப்பிட்டார்.

## உற்சவம்

சுழிபுரம், சனி

சங்கானை அரசடி விநாயகர்கோயில் வருடாந்த உற்சவம்நேற்றையதினம் ஆரம்பமாகியுள்ளது. தினமும் விசேட பூசைகளின் பின் சுமாமி எழுந்தருளி காட்சி கொடுப்பார் தேர்த் திருவிழாவுடன் உற்சவம் முடிவடையும்.


# பார்க்கர்




**எல்லா பேனைகளுக்கும் உகந்த சிறந்த மை!**

- புதிய பேனைகளை புத்துணர்ச்சி பெறச் செய்கின்றது.
- பழைய பேனைகளை புதிய ஜீவன் பெறச் செய்கின்றது.

உங்கள் பேனை புதியதோ, பழையதோ, என்ன ரகமோ, என்ன நிலையோ - ஆயினும் அதற்கு பார்க்கர் சுப்பர் குயிங்க் மை நிரப்புவது அத்தியாவசியமே! பேனைகள் எழுத தயங்கினால், தாமதித்தால் அது பேனைகளின் குற்றமல்ல; பாவிக்கும் மையின் குற்றம்! தரம் குறைந்த மைகள், குழாயில் அடைசலையும் தடங்கலையும் உண்டாக்கி எழுத்து முனையை "வாடச்" செய்கின்றன. இச் சந்தர்ப்பங்களில்தான் நீங்கள் சொல்வ் - X உடைய சுப்பர் குயிங்க் மையை நிரப்பவேண்டும். உங்கள் பேனையில் சுப்பர் குயிங்கினை நிரப்புங்கள்! இதிலுள்ள சொல்வ் - X அடைசலை அகற்றி..... எழுதும்போதே பேனையை சுத்திகரிக்கும்!

பள்ளிவேலைக்கும், வீட்டுவேலைக்கும் பாவியுங்கள்
**கழுவக்கூடிய ரோயல் புளு**

நிரந்தரமான கந்தோர் ரெக்கார்டுகளுக்குப் பாவியுங்கள்:
**பெர்மனன்ட் புளு, பிளக், புளு - பௌக், ரெட், கிரீன் மற்றும் டர்குயிஸ் புளு.**

பார்க்கர் பென் கம்பனிக்காகத் தயாரிப்பவர்கள்

**ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்**


# ஹாக்கி: சென். ஜோன்ஸிடம் மத்திய கல்லூரி தோல்வி

## மற்றுமொரு போட்டியில் கிறிஸ்ரியன் கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம், சனி

யாழ் மாவட்ட கல்லூரி விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் கல்லூரிகளுக்கிடையேயான ஹாக்கி சுற்றுப் போட்டியில் யாழ் மத்திய கல்லூரிக்கும் சென்ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற ஒரு காரசாரமான போட்டியில் சென்ஜோன்ஸ் கல்லூரி மத்தியகல்லூரியை வெகு சிரமப்பட்டு ஒரு கோலால் வெற்றியீட்டியது.

ஆரம்பத்திலிருந்து முடிவுவரையும் போட்டி தரமானதாகவும் ரசிப்பாகவும் காணப்பட்டது குறிப்பிடத்தக்கது. இடைவேளைக்கு முன்னர் இரு கோஷ்டியும் விட்டுக் கொடுக்காமல் போட்டியிட்ட போதும் சென் சென் ஜோன்கல்லூரி தனக்குக் கிடைத்த ஒரு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முதளாவது கோலை மின்னல் வேகத்தில் வெனுத்துவாங்கியது.

இடைவேளையின் போது மத்திய கல்லூரி ஒரு கோலும் பெறுதவகையில் சென் ஜோன்ஸ் ஒரு கோல் பெற்றிருந்தது

இடைவேளைக்குப் பின்னர் நடைபெற்ற போட்டி ரசிகர்களுக்கு நல்ல விருந்தாக இருந்தத.

இடைவேளைக்குப் பின்னர் ஒரு கோஷ்டியுமே கோல் போடவில்லை. இப்போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி (1—0) வெற்றிபெற்றது.

### மற்றுமொரு போட்டி

கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலயத்துக்கும் கோப்பாய் கிறிஸ்ரியன்கல்லூரிக்குமிடையே நடை

(3-ம் கலம் பார்க்க)

ஹாக்கி

## யாழ்ப்பாண கல்லூரி வெற்றி

சுழிபுரம், வெளளி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி கோஷ்டிக்கும் யாழ்ப்பாண மத்திய கல்லூரிக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற ஹாக்கிப்போட்டியில்யாழ்ப்பணக் கல்லூரிக் கோஷ்டியினர் வெற்றி பெற்றனர் போட்டி யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

## இந்துக்கல்லூரி விளையாட்டுப் போட்டி

வட்டுக்கோட்டை, வெள்ளி

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டி நேற்று நடைபெற்றது. சிவப்பு இல்லம் முதலிடமும், நீல இல்லம் இரண்டாவது இடமும், பச்சை, வெள்ளை இல்லங்கள் முறையே மூன்றும், நான்காம் இடத்தையும் பெற்றன.

விளையாட்டுப் போட்டியில் வட்டார வித்தியா தரிசி திரு. எஸ். சபாபதி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

வினோத உடைப் போட்டி பார்வையாளரைக் கவர்ந்த விளையாட்.டுகளில் ஒன்றாகும்.

கல்லூரி அதிபர் திரு. செ. சிவகுருநாதபிள்ளை நன்றி தெரிவித்துப் பேசுகையில், பெற்றார் சிலர் தங்கள் பிள்ளைகளை விளையாட்டுப் போட்டியில் சேர்த்துக் கொள்ளவேண்டாம் எனக் கடிதம் எழுதியிருப்பது குறித்து மாணவர்களின் உடல் நலனைக் கருதியே விளையாட்டுப் போட்டிகள் வைக்கப்படுகின்றன எனக் குறிப்பிட்டார்.

## ஜனசக்தி வெற்றி

யாழ்ப்பாணம், சனி

அரசடி ஜனசக்தி விளையாட்டுக் கழகத்திற்கும் புங்குடுதீவு சிவலைப்பிட்டி விளையாட்டுக்கழகத்திற்குமிடையே ஜனசக்தி மைதானத்தில் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் 14, 12, 14, 11 புள்ளிகளைப் பெற்று ஜனசக்தி ஜனசமூக நிலையம் வெற்றியீட்டியது. மு. இரத்தினம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்

(5-ம் கலத் தொடர்ச்சி)

பெற்ற போட்டியில் கிறிஸ்ரியன் கல்லூரி கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தை தோற்கடித்தது.

இப்போட்டியும் விளையாட்டுத்தரத்தில் உயர்வாகக் காணப்பட்டது. இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற போட்டியில் முதலில் கிறிஸ்ரியன் கல்லூரியே ஒரு கோலை போட்டது. இடைவேளையின் பின்னர் நடைபெற்றபோட்டியில் கிறிஸ்ரியன் கல்லூரி வீரர்களிடையே முன்னேற்றம் காணப்பட்டதெனினும் கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் பின்னணி வீரர்களின் விளையாட்டு பாராட்டுக்குரியது. சில்வஸ்ரன் எனும் பின்னணி வீரர் அபாரமாக பல தடவை முன்நோக்கி வந்த பந்தை பின்நோக்கி விளாசித்தள்ளினர். இப்போட்டி முடிவில்கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரி கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தை (1—0) கோல்களால் வெற்றியீட்டியது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகளுக்கு திரு. பூபாலசிங்கமும், திரு. செல்வரெத்தினமும் மத்தியஸ்தர்களாக [illegible]

# ஆறு லட்சம் ரூபா செலவில் முதல்தர விளையாட்டரங்கு!

## கொழும்பில் நிறுவப்படுகிறது

கொழும்பு, வெள்ளி

ஆறு லட்சம் ரூபா செலவில், முதல்தரமான விளையாட்டரங்கமொன்று (ஸ்டேடியம்) கொழும்பில் நிறுவப்பட்டுவருகிறது. இவ் விளையாட்டரங்கு பூர்த்தி பெறும் பட்சத்தில் ஆசியாவிலே மிகச் சிறந்த ஒரு விளையாட்டரங்கை இலங்கை கொண்டிருக்கும்.

முன்னர் ட்ரொலி பஸ் டிப்போவிருந்த இடத்தில் இவ் விளையாட்டரங்கு நிறுவப்பட்டுவருகிறது. கட்டட வேலைகள் ஏற்கனவே ஆரம்பமாகி முழு மூச்சாக நடைபெற்று வருகின்றன. இதற்கான செலவுகளை, விளையாட்டு அமைச்சு ஒதுக்கியுள்ளது. கொழும்பு மாநகரசபை விளையாட்டரங்கு நிர்மாண வேலைகளைக் கவனித்துவருகிறது,

கொழும்பு மாநகர சபையைச்சேர்ந்த அதிகாரி ஒருவர் இதுபற்றித் தெரிவிக்கையில் ஐந்து லட்சம் ரூபா செலவில் பல விளையாட்டு சாதனங்களும் வாங்கப்படும் என்று கூறினார்.

பாட்மின்டன், டேபிள் டெனிஸ், கரபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கூடைப் பந்தாட்டம். குத்துச் சண்டை, மல்யுத்தம் போன்ற பிரபல விளையாட்டுகளுக்கான சாதனங்கள் இப்பணத்தில் வாங்கப்படவிருக்கிறது.

கிரிக்கெட்டெஸ்ட்

# மேற்கிந்திய கோஷ்டிக்கு ஒரு சோதனையா?

— "அவதானி" —

லாட்ஸ், ஜூன் 17

கடும் மழை காரணமாக நேற்று ஆரம்பமான இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் அறுபத்தி மூன்று நிமிடங்களில் நிறுத்தப்பட்ட பின்னர் மீண்டும் ஆரம்பமானது ஒரு நல்ல சகுனமாகத் தோன்றவில்லை என்றே சொல்லலாம். மேற்கிந்திய கோஷ்டிக்கு இது ஒருசோதனைக்காலமா?

மேற்கிந்தியாவே டெஸ்டில்' (பூவா தலையா?) வெற்றிகண்டு (முதலாவது கிரிக்கெட் டெஸ்டை போன்று) துடுப்படி ஆட்டத்தை ஆரம்பித்தது.

### கான்ஹாய்

முதலில் நோய் கறுவும் கொன்ருட்ஹண்ட்டும் துடுப்பாடினார்கள். முதல் டெஸ்டில் மக்மொரிஸுக்குப் பதிலாக இப்பொழுது விளையாடும் இவர் 02 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதனைத் தொடர்ந்து முதல்தர வீரர் ரோகன் கன்ஹாய் துடுப்பாடினார். இவரும் எதிர்பாரா மாதிரி 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் நான்காவது துடுப்படி வீரராக பேஸில் புச்சர் கலந்துகொண்டார். ஓட்டங்களின் எண்ணிக்கை 51- ஐ எட்டவே மழையும் கடுமையானது. இதனைத் தெரிந்து நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

நீண்ட இடைவேளைக்குப் பின்னர் போட்டி மீண்டும் ஆரம்பமானது. இதில், ஹண்ட் 18 ஓட்டங்களுடனும் புச்சர் 49 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். ஆட்டம் முடிவடையும் கட்டத்தில் நர்ஸ் 40 ஓட்டங்களுடனும் ஸோபர்ஸ் 16 ஓட்டங்களுடனும் எடுத்திருந்தனர். இவர்களிருவரும் இன்று வெள்ளிக்கிழமை தொடர்ந்து விளையாடுகிறார்கள்.

முதல்நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து வீரர் ஹிக்ஸ் தான் மூன்று விக்ககட்டுகளையும் கைப்பற்றியிருந்தார். நைட் ஒருவிக்கட் வீழ்த்தியிருந்தார்.

இன்று இரண்டாவது நாள் எப்படி இருக்குமோ தெரியவில்லை. மழை தொடர்ந்து பெய்யாவிடில் இன்று நிலைமை இங்கிலாந்துக்குச் சாதகமாகவிருக்கலாம்? இதற்கு லாட்ஸ் மைதானம்என்னகூறுகிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜவுளி வர்த்தகர் மோசடிகளை தவிர்க்க விசேஷ சட்டங்கள்

## பார்லிமெண்டில் விரைவில் சமர்ப்பிக்கப்படும்

கொழும்பு வியா

ஜவுளி வர்த்தகத்தில் உள்ள குறைபாடுகளைக் களையவும் ஜவுளிகளைப் பதுக்குதல், ஜவுளி வியாபாரத்தில் கொள்ளைலாபமடித்தல், ஜவுளியை கூறுபடுத்தி விற்றல் ஆகிய மோசடிகளைச் செய்யும் வர்த்தகர்களை கடுமையாகத் தண்டிக்கவும் வகை செய்யும் புதிய சட்டங்கள் பாராளுமன்றத்தில் மிகவிரைவில் அவசரஅவசரமாக சமர்ப்பிக்கப்படும்

அநேகமாக இவை இம் மாதம் 22ந் திகதியே பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படுமென நம்பப்படுகிறது.

ஜவுளி விலைக்கட்டுப்பாடு அமுலுக்கு வந்ததிலிருந்து வர்த்தக அமைச்சு பல உத்தரவுகளைப் பிறப்பித்தது. இவற்றில் சட்டரீதியாக உள்ள சில குறைபாடுகளை இப்புதியசட்டங்கள் நிவர்த்திக்கும்.

புதிய சட்டங்களின் படி, கள்ளத்தனமாக ஜவுளி இருப்பு வைத்திருத்தல், ஜவுளிகளை நீள அகலத்தால் துண்டித்தபின் விற்றல், கட்டுப்பாட்டு விலைக்குமேல் விற்றல் ஆகியவை உட்பட வர்த்தகர்களின் பல மோசடிகள் தண்டனைக்குரியவையாக்கப்படும்.

# 2 பொலிஸ் இன்ஸ்பெகடர்கள் 3 கான்ஸ்டபிள்கள் கைது!

## ரிமாண்டில் வைக்க நீதிபதி உத்தரவு

கொழும்பு, வியாழன்

வழக்கொன்றை சோடிக்க முனைந்ததாகவும், ஒரு விவகாரம் சம்பந்தப்பட்ட சாட்சியத்தை மறைக்க முயற்சித்ததாகவும் சந்தேகிக்கப்பட்டு ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர், ஒரு உதவி இன்ஸ்பெக்டர், மூன்று கான்ஸ்டபிள்கள் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் கொழும்பு தெற்கு மாஜிஸ்திரேட் முன்னிலையில் அவரது வாசஸ்தலத்தில் ஆஜர் செய்யப்பட்டு, இம்மாதம் 29-ந் திகதிவரை ரிமாண்டில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

கோதபாய கிரிம்பகண்டா என்ற சிறுவனின் கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட விவகாரத்தில் சாட்சியத்தை மறைக்க முயற்சித்ததாகவும், இந்த வழக்கில் முக்கிய சாட்சியளிக்கக் கூடியவர்களை வைத்து ஒரு வழக்கை சோடிக்க முயற்சித்ததாகவும் தெகிவளைப் பொலிசைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் ரெஜி அமரசேகரா, உதவி இன்ஸ்பெக்டர் எஸ். பத்திராஜ, கான்ஸ்டபிள்கள் தேவசகாயம், பிரியரத்ன, தனபாலா ஆகியோர் சந்தேகிக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர்,

### வங்கி ஊழியர் உறுதி

யாழ்ப்பாணம், சனி

நாஷனல் அன்ட் கிறின்லேஸ்வங்கி ஊழியரினதும் திருக்கோணமலை ஐக்கிய வங்கி ஊழியரினதும் வேலைநிறுத்தம் சமரசமாகத் தீர்க்கப்பட்டாலும் யாழ்ப்பாண ஐக்கிய வங்கியில் சட்டரீதியற்ற முறையில் வேலையிலிருந்து நீக்கப்பட்ட மூன்று அங்கத்தவர்களும் மீண்டும் வேலைக்கு நியமிககப்படும்வரை இலங்கைவங்கி ஊழியர்சங்கம் தலது போராட்டத்தைக் கைவிடாது என்று ஊழியர் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்டக் கிளைப் பிரமுகர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

### ஆங்கில மொழி இருப்பது அவசியம்

கொழும்பு, வெள்ளி

'அரசாங்கம் ஆங்கிலம் போதனு மொழியாக தொடர்ந்து இருப்பதை சிரத்தையுடன் ஆலோசனை செய்ய வேண்டும். மாணவர்களின் பெற்றோர்கள் சிங்களவராயிருந்தாலும் சரி தமிழராயிருந்தாலும் சரி இதனை அரசாங்கம் மனதில் கொள்ள வேண்டும்'' என்று வெஸ்லிக் கல்லூரி அதிபர் திரு. ஏ எஸ். வீரசிங்கா வருடாந்த பரிசளிப்பு விழாவில் பேசும் பொழுது குறிப்பிட்டார்

திரு. வீரசிங்கா தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

ஆங்கிலம் மூலம் பாடங்கள் பிரதானமாக மாகாண பாடசாலைகளில் போதிக்கப்படலாம். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய பாஷைகள் போதனு மொழியாகவிருந்தால் பெற்றோர்கள் சிங்களப் பாஷையிலோ அல்லது மகாணப் பாஷையிலோ தங்கள் பிள்ளைகளுக்கு கல்வி போதிக்கும்படி கேடகமாட்டார்கள் என்றார்.

### அரியாலையில் ஒரு சடலம்! யாருடையது?

யாழ்ப்பாணம், வெள்ளி

ஒரு மாதத்துக்கு முன்னர் இறந்ததாகக் கருதப்படும் ஒரு சடலத்தைப் பொலிசார் அரியாலையில் கண்டு பிடித்துள்ளனர்

சுமார் 50 வயது மதிப்பிடத்தக்க ஒருவரின் சடலம் பழுதடைந்த நிலையில் காணப்பட்டது இறந்தவருக்கு அருகில் ஒரு பை. இருக்கக் காணப்பட்டது. அத்துடன் அவருடைய வேட்டியில் V. P. என்ற சலவைக் குறியிருப்பதாகவும், பொலிசார் தெரிவித்துள்ளனர். இறந்தவர் ஒரு மீனவராக இருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட சலவைக் குறி பற்றி விபரம் தெரிந்தவர்கள் உடனடியாக யாழ்ப்பாணம் பொலிசாருடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

### மாணவர்களுக்கு எம். பி. யின் புத்திமதி

ஊர்காவற்றுறை, வெள்ளி

''மாணவர்கள் தொழிற்துறைகளில் ஈடுபட்டு உழைக்கவேண்டும். உத்தியோக மோகத்தை விட்டுவிட வேண்டும்.''

இவ்வாறு தீவுப்பகுதி எம். பி. திரு. நவரத்தினம் அண்மையில் நடைபெற்ற வேலணை மத்திய கல்லூரி விளையாட்டுப் போட்டியின் போது உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், தீவுப்பகுதியில் விஞ்ஞானக் கல்வித் தரத்தை உயர்த்த தாம் மேற்கொள்ளவிருப்பதாகவும் குறிப்பிட்டார். ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து கல்வி மந்திரி ஏற்ற நடவடிக்கைகளைக் கயாண்டுவருவதையும் எம். பி. பாராட்டிப் பேசினர்.

இந்த விழாவில் கலலூரியின் ஆரம்ப அதிபராகக் கடமையாற்றிய திரு. ஏ கே. கந்தையா கலந்து கொண்டார்.

இல்லங்களுக்கிடையே நடைபெற்ற போட்டியில் நீல இல்லம் முதலாவது இடத்தைப் பெற்றது.

திருமதி கந்தையா பரிசுகளை வழங்கினர்.

### இந்தோனேஷியா ஏற்றது

ஜாகர்த்தா, ஜூன் 16

இந்தியா வழங்கிய பத்துக் கோடி ரூபா கடனுதவியை இந்தோனேஷியா ஏற்றுக் கொண்டதாக அறிவிக்கப்பட்டது.

### தமிழரசு மகாநாட்டில்..

(1 ம்பக்கத்தொடர்ச்சி)

எனது விஜயத்தின் மூலம் இரு சமூகங்களுக்கிடையில் உள்ள நல்லெண்ணமும் ஒற்றுமையும் வளரவும் வலுப்பெறவும் இச்சூழ்நிலை உதவுமென்பதில் சந்தேகமில்லை.

முதலாவதாகத் தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகள் என்ன என்பதை நேரில் அறிந்து தமிழரசுக் கட்சியால் நிறைவேற்றப்படும் தீர்மானங்களையும் கவனிக்க இச்சந்தர்ப்பம் வழிவகுத்துள்ளது.

ஒருவர் எந்தப் பிரஜையாகவிருந்தாலும் எந்த சமூகத்தைச் சேர்ந்தவராயிருந்தாலும் அவர் விஷயத்தில் தேசிய அரசாங்கம் நீதியற்ற முறையில் நடந்து கொள்ளாது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.''


### வரி விளம்பரம்

### நன்றி நவிலல்

10-6-66 ல் சிவபதமடைந்த எனது கணவர் க. சுப்பையாக் குருக்களின் தசாகம் 19-6-66,—20-6-66 ல் ஏகோதிபடம் 22-6-66 ல் சபிண்டீகரண சுத்தி புண்யாகம் நடைபெறும். எனது கணவரின் ஈமக்கிரியையில் பங்குபற்றிய உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எனது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் சு. இரசம்மா, 356, கே. கே. எஸ். ரோட், வண்ணார்பண்ணை.

568


# பார்லிமெண்ட் கூட்டத்தொடர் 22-ல் கலைக்கப்படலாம்

பம்பலப்பிட்டி, வெள்ளி

பார்லிமெண்ட் கூட்டத்தொடர் இம்மாதம் 22-ம் திகதியிலிருந்து அடுத்த மாதம் 8-ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டிருக்கும். 8 ம் திகதி கவர்னர் ஜெனரல் சிம்மாசனப் பிரசங்கம் நிகழ்த்துவார்.

பார்லிமெண்ட் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டிருக்கும் மிகக் குறுகிய காலம் இது அரசாங்க விஷயங்கள் பல பைசலாக்கப்பட வேண்டியிருப்பதாலேயேஇவ்விதம் ஒத்திவைக்கப் படவேண்டியிருப்பதாக அறியப்படுகிறது.

ஜனப்பிரதிநிதிகள் சபை இம்மாதம் 21-ம் திகதி கூடும்போது கூட்டத்தொடர் ஒத்திவைப்புப் பற்றி அறிவிக்கப்படும்.

விசாரணை கமிஷன் (திருத்த) மசோதாவை இம்மாதம் 22-ம் திகதி நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுமென்று தெரிகிறது. இது நிறைவேற்றப்படாவிடடால் இம்மசோதா காலாவதியாகிவிடும்.

பார்லிமெண்ட் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்படுவதால் சர்ச்சைக்குரிய குற்றத்தடுப்பு (திருத்த) மசோதா, டெடிகம தேர்தல் ஆட்சேபமனு விசாரணை செய்யப்பட்டிருக்கும் போது பிரதம நீதியரசர் திரு எம் சி சன்சோனி பிரதமர் அமெரிக்காசென்ற பொழுது அவரை வழியனுப்ப விமான நிலையத்துக்குச் சென்றதை ஆட்சேபித்து எதிர்க்கட்சியினரால்கொண்வரப்பட்ட பிரேரணை ஸ்தலஸ்தாபன மந்திரி திரு எம். திருச்செல்வத்தின் மீதுஇவர்களால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை ஆகியவையும் காலாவதியாகும்.

இந்த ஒத்திவைப்பினுல் எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவுக்கு இலங்கை இன்சூரன்ஸ் கம்பனி அன்பளிப்புச்செய்த மொரிஸ் ஒக்ஸ்போர்ட் கார் சம்பந்தமாக விசாரணை செய்துவரும் தெரிவுக்கமிட்டி காலாவதியாகிவிடுமென நம்பப்படுகிறது. இந்தத் தெரிவுக் கமிட்டிக்கு ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர் தலைவராகவிருக்கிறார். இப்போது இதன் விசாரணை நடைபெற்றுவருகிறதென்பது குறிப்பிடத்தக்கது.

### நிவாரண வேலைகள்

வல்வெட்டித்துறை, வெள்ளி

கடந்த புயல் நிவாரணமாக வடமராட்சிப்பகுதியிலுள்ள ஆளியவளை, உடுத்துறை, செம்பியன்பற்று, மாமுனை, நாககோவில் ஆகிய கரையோரப் பகுதிகளில் அரசாங்கத்தினுல் கட்டிக் கொடுக்க முன்வந்திருக்கும் 213 வீடுகளையும் கட்டிக் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதை அப்பகுதிப் பொதுமக்கள் பருத்தித்துறை எம். பி.யிடம் முறையிட்டதைத் தொடர்ந்து அவற்றிற்குப் பொறுப்பான மேலதிகாரிகளை திரு. ரைரத்தினம் சந்தித்துப் பேசியதன் விளைவாக தற்பொழுது கட்டிட வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

### சுகாதாரவிழா

மாவிட்டபுரம், வெள்ளி

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அரங்கில் திரு. தெ. து. ஜெயரத்தினம் தலைமையில் சுகாதார விழாக் கொண்டாடப்பட்டது சுகாதார சம்பந்த பேச்சுக்களும் நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

### பிரிட்டிஷ் வேலைநிறுத்தம்

லண்டன், ஜூன் 17

பிரிட்டனில் ஒரு மாத காலத்திற்கு மேலாக நடைபெற்றுவரும் மாலுமிகள் வேலைநிறுத்தம் சம்பந்தமாய், தம்மை டவுனிங் தெரு 10-ம் லக்கத்தில் சந்திக்குமாறு யூனியன் பிரதிநிதிகளையும், முதலாளிகளையும், பிரதமர் வில்சன் கேட்டிருக்கிறார்.

### கப்பல்கள் மோதி பலர் மரணம்

நியுயோர்க், ஜூன் 17

நியுயோர்க் துறைமுகத்தில் இரு எண்ணெய்க் கப்பல்கள் மோதிக்கொண்டதால் 17 பேர் கொல்லப்பட்டனர் பலர் காணமற் போய்விட்டனர்.

அமெரிக்கக் கப்பல் ஒன்றும், பிரிட்டிஷ் கப்பல் ஒன்றும் மோதியதால் இரண்டும் பிளந்து தீப்பற்றின.

காயமடைந்த 70 பேர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டனர்.

நியுயோர்க் துறைமுகத்தின் ஒருபகுதி இதனுல் மூடப்பட்டிருந்தது.


உடுப்பிட்டி கி. ச. பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கச் சமாசம்

(வரையுள்ளது)

### கணக்காளர் தேவை

மேற்படி சமாசத்திற்குஓர் கணக்காளர் (Book Keeper) தேவை.

1. வயது:— 25க்கு மேல் 40க்குள் இருக்க வேண்டும்.
2. தராதரம்:— (G C.E. OrdinaryLevel) பொதுச் சாதாரண தராதரப் பத்திர வகுப்பு சாதாரணதரத்தில்ஒரேமுறையில் ஆறு பாடத்தில் சித்தியடைந்தவராக இருக்க வேண்டும். அல்லாமலும், தமிழ், கணிதம் உட்பட மூன்று பாடங்களில் விசேட சித்திபெற்றவராக இருக்க வேண்டும்.
   II. கணக்கு வைக்கும் முறை(BookKeeping)யில் போதியஅனுபவம்பெற்றவராக இருக்கவேண்டும்.
   III. ஆங்கில அறிவு பெற்று இருத்தல் விரும்பத்தக்கது.
3. சம்பளம்:— ரூபா 135/-தொடக்கம் 235/- வரை. (வாழ்க்கைச் செலவு ரூபா 15/-).
4. பிணை:— ரொக்கம் 500/-

   ஆதனம் 1000/-
5. விண்ணப்பம் அனுப்புவோர் 3-7-66க்கு முன் மேற்படி சமாசத் தலைவர் அவர்கட்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும். விண்ணப்பம் அனுப்பும் விலாசம்: தலைவர், உடுப்பிட்டி கி.ச. பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கச் சமாசம், வல்வெட்டித்துறை.

இங்ஙனம்,

பொ. கணபதிப்பிள்ளை,

தலைவர்

உடுப்பிட்டி.

15-6-66. 608

வியாபாரம் பெருக

விளம்பரம் செய்க.


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org